Regd. No. M. 4593. KUDI ARASU 12பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. தனி வெளியீடு. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

மாலை 18 } சனிக்கிழமை, 9-6-1945 வைகாசி-மீ 27உ. } மலர் 35

ஏது கடவுள்? ஏது மதம்?

ஈ. வெ. ரா. 17 வருஷத்திற்கு முன் பேசியது

தேவர்கள் என்றும் பல தெய்வங்கள் என்றும் அவற்றின் அவதாரமென்றும் உருவமென்றும் அதற்காக மதமென்றும் சமயமென்றும் மதாச்சாரியர்கள் என்றும் சமயாச்சாரியர்கள் என்றும் கட்டியழுபவர்கள் ஒன்றா பகுத்தறிவில்லாதவர்களாகவாவது இருக்க வேண்டும், அல்லது வயிற்றுப்பிழைப்புக்கு புறப்பட்ட புரட்டர்களாயிருக்க வேண்டும், என்பதை அபிப்பிராயமாகக் கொண்டு வெகு கால முதலே பல தடவைகளில் பல பெரியார்கள் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

அதுபோலவே சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரம்மா என்றோ அல்லது ஒரு ஆசாமி என்றோ அல்லது ஒரு உருவமென்றோ கொள்ளுவதும் உண்மை ஞானமற்றவர்களின் கொள்கையென்றும் பலர் சொல்லிவந்திருக்கிறார்கள். இதைத்தான் சுயமரியாதைக்காரர்கள் எடுத்துக்காட்டி வருகிறார்கள்.

ஆதலால் உலகத் தோற்றமும், அதில் நடைபெறும் உற்பத்தி, வாழ்விப்பு, அழிவிப்பு என்பவைகளான மூவகைத் தன்மைகளையும், மேற்படி "சாமி"களோ ஆசாமிகளோ ஒவ்வொரு தன்மையை ஒவ்வொரு ஆசாமி நடத்துகிறான் என்றோ, அல்லது ஒவ்வொரு தன்மைக்கு ஒவ்வொரு ஆசாமி பொறுப்பாளியாய் இருக்கின்றான் என்றோ நினைத்துக்கொண்டிருப்பவர்கள் விசார ஞானமற்றவர்கள் என்றே சொல்லுவோம்.

மற்றபடி மேல்கண்ட ஒவ்வொரு தன்மைக்கு மேல் கண்ட ஒவ்வொரு பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது என்றும், அது ஒரு உருவமல்ல, ஒரு உருப்படி அல்ல என்றும், உற்பத்தி, வாழ்வு, அழிவு என்னும் தன்மையையும் அத்தன்மைக்கு ஆதாரமான தோற்றங்களைத்தான் கடவுள் என்றோ, தெய்வம் என்றோ, சாமி என்றோ, ஆண்டவன் என்றோ கருதுகிறோம் என்பதாகவும், தானாகத் தோன்றி, தானாக வாழ்ந்து, தானாக அழிகின்றது என்கின்றவைகள் இயற்கை தான் என்றும், அவ்வியற்கைக்குத்தான் கடவுள், ஆண்டவன், சாமி, தெய்வம் என்று சொல்லுகின்றோம் என்பதாகவும், மற்றும் இவ்வியற்கைத் தோற்றங்களுக்கு ஏதாவது ஒரு காரணமோ அல்லது ஒரு சக்தியோ இருக்கவேண்டுமே என்றும், அந்தக் காரணத்திற்கோ சக்திக்கோ தான் கடவுள், சாமி, ஆண்டவன், தெய்வம் என்கின்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதாகவும் சொல்லிக்கொண்டு மாத்திரம் இருப்பவர்களிடத்தில் நமக்கு இப்போது பெரியதொரு தகராறு இல்லை.

ஆனால் அந்தக் கடவுள் என்பவைகளுக்கு கண், மூக்கு, வாய், கை, கால், தலை, பெயர், ஆண் பெண் தன்மை, பெண்ஜாதி புருஷன், வைப்பாட்டி, தாசி, குழந்தை குட்டி, தாய், தகப்பன் முதலியவைகளைக் கற்பித்து, அவைகளினிடத்தில் பக்தி செய்யவேண்டும் என்றும் அவற்றிற்குக் கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்து தினம் பல வேளை பாலாபிஷேகம் படைப்புப் பூஜை முதலியன செய்யவேண்டும் என்றும் அச்சாமிகளுக்குக் கல்யாணம் முதலியவைகள் செய்வதோடு அந்தக் கடவுள் அப்படிச் செய்தார், இந்தக் கடவுள் இப்படிச் செய்தார் என்பதான 'திருவிளையாடல்கள்' முதலியவைகள் செய்துகாட்ட வருஷா வருஷம் உற்சவம் செய்யவேண்டும் என்றும், அக்கடவுள்களின் பெருமையைப் பற்றியும் திருவிளையாடல்களைப் பற்றியும் பாடவேண்டும் என்றும், அப்பாடல்களை 'வேதமாக' 'திருமுறையாக' 'பிரபந்தமாக' அப்படிப்பட்ட கடவுள்கள் உண்டு என்பதற்கு ஆதாரமாகக் கொள்ளவேண்டும் என்றும், அப்பாடல்களைப் பாடினவர்களை 'சமயாச்சாரியர்'களாக 'ஆழ்வார்'களாக 'சமயகுரவர்'களாக 'நாயன்மார்'களாக பல அற்புதங்கள் செய்த அவதாரங்களாகக் கொள்ள வேண்டுமே என்றும், இதுபோன்ற இன்னும் பல செய்தால் அக்கடவுள்கள் நமது இச்சைகளை நிறைவேற்றுவார்கள் என்றும், மற்றும் நாம் செய்த—செய்கின்ற—செய்யப் போகின்ற எவ்வித அக்கிரமங்களையும் அயோக்கியத்தனங்களையும் கொடுமைகளையும் மன்னிப்பார் என்றும் சொல்லப்படுபவைகளான மூடநம்பிக்கையும் வயிற்றுப்பிழைப்பு சுயநலப்பிரசாரமும் ஒழியவேண்டுமென்பதுதான் நமது கவலை. ஏனெனில் இந்நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கும், மக்களை மக்கள் ஏமாற்றிக் கொடுமைப்படுத்துவதற்கும், மற்ற நாட்டார்கள் போல நம் நாட்டு மக்களுக்குப் பகுத்தறிவு விசாலப்படாமல், மற்ற நாட்டார்களைப்போல விஞ்ஞான (சையன்ஸ்) சாஸ்திரத்திலே முன்னேற்றமடையாமல் இருப்பதற்கும், அந்நிய ஆட்சிக் கொடுமையிலிருந்து தப்பமுடியாமல் வைத்த பளுவைச் சுமக்க முதுகைக் குனிந்து கொடுத்துக் கொண்டிருப்பதற்கும் இம் மூடநம்பிக்கைளும், சில சுயநலமிகளின் வயிற்றுச் சோற்றுப் பிரசாரமும் இவைகளினால் ஏற்பட்ட கண்மூடி வழக்கங்களும் செலவுகளுமே தான் காரணங்கள் என்பதாக நாம் முடிவு செய்து கொண்டிருக்கின்றோம்.

நாமும் நமது நாடும் அடிமைப்பட்டுகிடப்பதற்கும், ஒருவரையொருவர் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொடுமைப்படுத்தி ஒற்றுமையில்லாமல் செய்திருப்பதற்கும், மக்கள் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பொருள்கள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படாமல் பாழாவதற்கும், மக்களின் அறிவு வளர்ச்சி கட்டுப்பட்டுக் கிடப்பதற்கும், சிறப்பாக மக்களின் ஒழுக்கங்கள் குன்றி மக்களிடத்தில் மக்களுக்கு அன்பும் உபகாரமும் இல்லாமல் இருப்பதற்கும் மேற்கண்ட கொள்கைகள் கொண்ட கடவுள் என்பதும், அதன் சமயமும் சமயாச்சாரியர்கள் என்பவர்களும் அவர்களது பாடல்களும் நெறிகளுமே முக்கிய காரணம் என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம். சொல்லத் தயாராயிருக்கின்றோம்.

பிறகு, இக்கடவுள்களின் பொருட்டாக நாட்டில் பூசைகளுக்கும், அபிஷேகத்திற்கும், அவற்றின் கல்யாண முத

லிய உற்சவத்திற்கும், பஜனை முதலிய காலக்ஷேபத்திற்கும், இக்கடவுள்களைப் பற்றிய சமயங்களுக்காக மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மூர்த்தி ஸ்தலம், தீர்த்த ஸ்தலம் முதலிய யாத்திரைகளுக்கும், இக்கடவுள் அவதார மகிமைகளையும் திருவிளையாடல்களையும் இக்கடவுள்களைப்பற்றிப் பாடின பாட்டுக்களையும் அச்சடித்து விற்கும்புஸ்தகங்களையும்வாங்குவதற்கும், மற்றும் இவைகளுக்காகச் செலவாகும் பொருள்களாலும் நேரங்களாலும் ஏற்படும் செலவும் நம் ஒரு நாட்டில்மாத்திரம் சுமார் இருபது கோடி ரூபாய்களுக்குக் குறைவில்லாமல் வருஷா வருஷம் பாழாகிக்கொண்டே வருகின்றன என்று சொல்லுவது மிகையாது.

இவ்விருபதுகோடி ரூபாய்கள் இம்மாதிரியாக பாழுக்கிறைக்காமல், மக்களின் கல்விக்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, விஞ்ஞான (சையன்ஸ்) வளர்ச்சிக்கோ, தொழில் வளர்ச்சிக்கோ செலவாகப்பட்டு வருமானால் நம்நாட்டில் மாத்திரம் வாரம் லக்ஷக்கணக்கான மக்களை நாட்டை விட்டு அன்னிய நாட்டிற்கு கூலிகளாக ஏற்றுமதி செய்ய முடியுமா? அன்றியும் தொழிலாளர்கள் கஷ்டங்கள் என்பது ஏற்படுமா? தீண்டக்கூடாத—நெருங்கக் கூடாத—பார்க்கக்கூடாத—மக்கள் என்போர்கள் கோடிக் கணக்காய் பூச்சி, புழு, மிருகங்களுக்கும் கேவலமாயிருந்து கொண்டிருக்க முடியுமா? 100க்கு மூன்று பேர்களாயிருக்கும் பார்ப்பனர்கள் மற்ற 100க்கு 97 பேர்களை சண்டாளர், மிலேச்சர், சூத்திரர், வேசி மக்கள், தாசி மக்கள், அடிமைப் பிறப்பு என்று சொல்லிக்கொண்டு அட்டை இரத்தத்தை உறிஞ்சுவது போல் உறிஞ்சிக்கொண்டும், நம்மையும் நம் நாட்டையும் அன்னியனுக்குக் காட்டிக்கொடுத்து நிரந்தர அடிமைகளாக இருக்கும்படி செய்து கொண்டும் இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம்.

நமக்கு கல்வி இல்லாததற்கு சர்க்கார் மீது குற்றம் செலுத்துவதில் கவலை கொள்ளுகின்றோமேயல்லாமல் நம் சாமியும், பூசாரியும், சமயமும் நம் செல்வத்தையும் அறிவையும் கொள்ளை கொண்டிருப்பதைப் பற்றி யாராவது கவலை கொள்ளுகின்றோமோ என்று கேட்கின்றோம்.

சிலர், "அன்பையோ, அருளையோ, ஒழுக்கத்தையோ, உபகாரத்தையோ மாறு பெயரால் கடவுள் என்று கூப்பிடுகின்றேன், அதனால் உனக்கு என்ன தடை?" என்று யாராவது சொல்ல வருவார்களானால், அதையும் (அதாவது அக்குணங்கள் என்று சொல்லப்பட்ட கடவுள் என்பதையும்) பின்பற்றும்படியான குணங்களாகவோ "கடவுள்" களாகவோ தான் இருக்க வேண்டும் என்று சொல்லுகின்றோமே ஒழிய குணங்களைப் பின்பற்றாமல் வெறும் வணங்கும்படியான கடவுளாக இருக்க நியாயம் இல்லை என்றே சொல்லுவோம்.

மதம்

இதுபோலவேதான் "மதம் என்பதும் சமயம் என்பதும் சமயநெறி என்பதும் மற்ற ஜீவன்களிடத்தில் மனிதன் நடந்து கொள்ளவேண்டிய நடையைப்பற்றிய கொள்கைகளைக் கொண்டது" என்பவர்களிடத்தில் நமக்கு தகராறு இல்லை. "அன்பே சிவம்" என்பதான சிவனிடத்தில் நமக்கு சண்டையில்லை. "அன்பு என்னும் குணம் தான் சிவம்; அந்த அன்பைக்கொண்டு ஜீவன்களிடத்தில் அன்பு செலுத்துவது தான் சைவம்" என்பதானால் நாமும் சைவன் என்று சொல்லிக் கொள்ளவும் ஆசைப்படுகின்றோம். அதுபோலவே "ஜீவன்களிடத்தில் இரக்கம் காட்டுவது, ஜீவன்களுக்கு உதவி செய்வது ஆகிய குணங்கள் தான் விஷ்ணு; அக்குணங்களைக் கைக்கொண்டு ஒழுகுவதுதான் வைணவம்" என்பதான விஷ்ணுவிடத்திலும் வைணவனிடத்திலும் நமக்கு தகராறில்லை என்று சொல்லுவதோடு நாமும் நம்மை ஒரு வைணவன் என்று சொல்லிக்கொள்ளும் நிலைமை ஏற்படவேண்டும் என்றே ஆசைப்படுகின்றோம். நமக்கும் மற்றும் உள்ள மக்களுக்கும் அச்சைவத் தன்மை"யும் "வைணவத் தன்மை"யும் ஏற்பட வேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

அப்படிக்கில்லாமல், இன்னமாதிரி உருவம் கொண்ட அல்லது குணம் கொண்டதுதான் கடவுள் என்றும், அதை வணங்குகிறவன் தான் சைவனென்றும் அப்படி வணங்குகிறவன் இன்னமாதிரியான உடை பாவனை கொண்டவனாகவும் இன்னமாதிரி குறி இடுகிறவனாகவும் இருப்பதுதான் சைவம் என்றும், இன்ன பேருள்ள இன்ன காரியம் செய்த கடவுள்களைப் பற்றிப் பாடின, எழுதின ஆசாமிகளையும் புஸ்தகத்தையும் வணங்குவதும் மரியாதை செய்வதும்தான் சைவம் என்றும், மற்றபடி வேறு இன்ன உருவமோ, பேரோ உள்ள 'கடவுள்' என்பதை வணங்குகிறவர்களையும் வேறு குறி இடுகின்றவர்களையும் யாதொரு குறியும் இடாதவர்களையும் சைவரல்லாதவர் என்று சொல்லுமான கொள்கைக்காரரிடமே நமக்குப் பெரிதும் தகராறு இருக்கின்றது என்று சொல்வதுடன் அக்கொள்கைகளையும் அச்சமயங்களையும் அக்கடவுள்களையும் பாமர மக்களிடம் பரவவிடக்கூடாது என்றும் சொல்லுகின்றோம்.

அன்றியும் பல சமயப்புரட்டர்கள் இம்மாதிரி விவகாரம் வரும்போது "கடவுள் என்பதாக ஒரு தனி வஸ்துவோ ஒரு குணமோ இருப்பதாகச் சொல்லவில்லை" என்றும், "மலைதான் கடவுள், ஆறுதான் கடவுள், சமுத்திரம்தான் கடவுள், மரம் செடிதான் கடவுள், புஷ்பம் தான் கடவுள், அதன் மணம்தான் கடவுள், அழகுதான் கடவுள், பெண்தான் கடவுள், அதன் இன்பம்தான் கடவுள், இயற்கைதான் கடவுள், அத்தோற்றம் தான் கடவுள்" என்பதாக தமக்கே புரியாமல் உளறுவதும், மறுபடியும் "சிவன் தான் முழுமுதற் கடவுள், மற்றபடி விஷ்ணுவும் பிரம்மாவும் அவரது பரிவார தேவதைகள், சைவசமயம் தான் உண்மைச் சமயம் அதுதான் முக்தி அளிக்க வல்லது" என்பதும், அல்லது "விஷ்ணுதான் முழுமுதற் கடவுள், அதுதான் பரத்துவம் கொண்டது, மற்றவைகள் விஷ்ணுவின் பரிவார தேவதைகள்" என்பதும், "வைஷ்ணவ சமயம் தான் உண்மைச் சமயம், அதில்தான் பரத்திற்கு மார்க்கம் உண்டு" என்பதும்; "அச்சிவனையோ விஷ்ணுவையோ முழுமுதற் கடவுளாகக் கொண்டு அக்கடவுள்களையும் அச்சமயங்களையும் பாடினவர்கள் தான் கடவுள் நெறியையும் நிலைமையையும் உணர்ந்த பெரியவர்கள்—சமயாச்சாரியார்கள்" என்பதாக மக்கள் முன் உளறிக்கொட்டி அவர்களது மனதை குழப்பச் சேற்றில் அழுத்துகின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களது புரட்டையும் பித்தலாட்டங்களையும் வெளியாக்கி மக்களைக் குழப்பச் சேற்றிலிருந்து விடுவிக்கவேண்டுமென்று தான் சொல்லுகின்றோம்.

உலகத்தில் கடவுள் என்பது இன்னது என்பதாக மனதில் விளப்படுத்திக் கொள்ளாமலே கடவுளைப் பற்றிய தர்க்கங்களும் தகராறுகளும் தினமும் நடைபெற்று வருகின்றன. இது இன்று நேற்று ஏற்பட்ட விவகாரம் அல்ல என்றுங்கூடச் சொல்லுவோம்.

எனவே, மக்களின் பாரம்பரியமானதும் எங்கும் பரவி யிருக்கும்படியானதுமான மடமைக்கு இதைவிட வேறு உதாரணம் கிடையாது என்பது நமது அபிப்பிராயம். ஏனெனில் இந்த விவகாரம் பாமர மக்களிடையில் மாத்திரம் நடைபெற்று வருகின்றது என்று சொல்லுவதற்கில்லை; இது பெரும்பாலும் படித்தவன், ஆராய்ச்சிக்காரன், பண்டிதன், பக்திமான் என்கின்ற கூட்டத்தாரிடையே தான் பெரிதும் (இவ்வறியாமை) இடம்பெற்று உரம் பெற்றிருக்கின்றது. இவைகள் ஒழியச் செய்யும் காரியத்தை நாஸ்திகமென்றும் பாபச் செயல் என்றும் யார் சொன்னாலும் சுயமரியாதைக்காரர்கள் பயப்படக் கூடாது.

ரோஜா முத்தையா

மிராண்டா-கஜேந்திரன் வாழ்க்கை ஒப்பந்தம்

பெரியார் ஈ. வெ. ரா. பேச்சு

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திருப்பத்தூரில் தோழர்கள் கஜேந்திரன் மிராண்டா அவர்களின் வாழ்க்கை ஒப்பந்தத்தின்போது பிரின்ஸ்பால் இராமசாமிக்கவுண்டர் அவர்கள் தலைமையில் பேசிய சொற்பொழிவின் சுருக்கம்:-

'தலைவரவர்களே, தோழர்களே! மணமக்களே! பெற்றோர்களே! தோழர்கள் கஜேந்திரன் மிராண்டா வாழ்க்கை ஒப்பந்தம் 9-30 மணிக்கு முடிந்தது. இப்பொழுது மணி 12.30. இந்த 3 மணி நேரத்தில் 1½ மணி நேரத்திற்கு அதிகமாக பரிசும், மொய் எழுதுவதும் நடந்தது. இது பெரும்பான்மை நேரத்தைக் கவர்ந்து கொண்டது. அதனால் உங்கள் பொறுமைக்கு அளவு கடந்த சோதனை ஏற்பட்டு இருக்கலாம். என்றாலும், இப்படிப்பட்ட சில சலிப்புதரும் பழக்கங்கள் இப்படிப்பட்ட சீர்திருத்த திருமணங்களிலும் நடைபெற்று விடுகின்றன. இங்கு கூடியிருக்கும் 1000 கணக்கான மக்கள் இந்தப் பரிசு வழங்குவதிலும் மொய் எழுதுவதிலும் பொறுத்துக்கொண்டே இருந்தது மிகவும் குறிப்பிடத் தகுந்தபொறுமையேயாகும். இங்கு பலர் எனக்கு முன் பேசினார்கள். அதிலும் அதிகம் பேர் பேசியிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் திருமணத்தைப் பற்றியே பேசினார்கள். அதிலிருந்து உங்களுக்குப் பல விஷயங்கள் தெரிந்திருக்கலாம். நான் சொல்லுவது சற்று கவனமாய் கேட்கவேண்டியதாகும். நாங்கள் திருமணங்களுக்கு ஒரு குறிப்பிட்ட எந்தவிதமான கொள்கையையும் கொண்டிருக்கவில்லை. இம்மாதிரியான காரியங்களில் எங்களுடைய சம்பந்தத்திற்குக் காரணம், எல்லாம் நிலைகுலைந்து இழிவுபட்டு கீழ் நிலையிலிருக்கும் நம் சமுதாயம், அதாவது திராவிட சமுதாயம் தலைதூக்குவதற்கு ஒரு பெருத்தபுரட்சி ஏற்படவேண்டுமென்பதேயாகும். புரட்சிக்கு ஆகவேண்டியே இம்மாதிரி காரியங்களில் மக்களுக்கு மனமாற்றத்தை உண்டாக்க முயற்சிக்கிறோம். நம் விடுதலைக்குத் தடையாய் இருப்பதெல்லாம்; நம் மனதில் உள்ள வெகு காலைய பழக்கவழக்கம் என்பதும், மதம், சாஸ்திரம், கடவுள் வாக்கு என்கின்ற உணர்ச்சிகளுமேயாகும். இந்தமாதிரியான காரணங்களால் பலர் மேன்மையடைகிறார்கள். அதே சமயத்தில் அதே காரணங்களால் நாம் கீழ்மையையும், இழிமையையும் அடைந்து தலையெடுக்கமுடியாதவர்களாய் இருக்கிறோம். இதற்காக நாம் செய்ய வேண்டியது இந்த எண்ணங்கள் மாறும்படியான ஒரு தலைகீழ் புரட்சி என்று கருதுகிறோம். திருமணம் நமக்கு ஒரு முக்கியமான காரியமல்ல. திருமணத்திற்கு ஒரு குறிப்பிட்ட கொள்கையோ திட்டமோ கிடையாது. திருமணம் என்பதை ஒரு ஆணும் பெண்ணும் கூடி வாழ்க்கை துவக்குவதையே ஒரு கருத்தாகக் கொண்டுள்ளோம். அதற்காகவே அநேக பழக்கவழக்கம், சாஸ்திரம், சடங்கு, சட்டதிட்டம் என்கிறோம். ஆணும் பெண்ணும் கூடி நடத்தும் வாழ்க்கைக்கு இவை ஒன்றும் தேவையில்லை. எந்த மனிதனுடைய தனிப்பட்ட முயற்சியும் தேவையில்லை. அது ஒரு இயற்கை சம்பவம் என்பதோடு, நடக்காமல் இருக்காது என்கின்ற இன்றியமையாத காரியமுமாகும். இந்தக் கூட்டு வாழ்க்கை அல்லது சேர்க்கை என்பது காலதேச வர்த்தமானத்தையும்சமுதாயமுறை சட்டம் என்பதையும், ஆதாரமாய் கொண்டதே தவிர தனிப்பட்ட இயற்கைத் தத்துவமல்ல. உதாரணமாக மனிதனுக்கு மனித சமுதாயத்தில் திருமண முறை எப்பொழுதிருந்து துவக்கப்பட்டது என்பதற்கு ஆதாரம் காண முடியாது. துவக்கப்பட்ட காலத்தில் என்ன கொள்கை, என்ன முறை இருந்தது என்பதையும் கண்டுபிடிக்க முடியாது. குறிப்பாக நமக்கு நம் இனத்தின்படி திராவிடர்கள் என்றாலும் சரி, மதத்தின்படி சூத்திரர்கள் என்றாலும் சரி, என்ன முறை இருந்து வந்தது? எது உரியது? இவற்றிற்கு என்ன ஆதாரம்?, என்று சொல்ல ஒரு தெளிவான சாட்சியமும் கிடையாது. நாளும் நமக்கு இனிமேல் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லவும் முடியாது. இப்பொழுது இது வரையில் இருந்து வந்ததையோ, இப்பொழுது மாற்றம் அடைந்ததையோ வருங்காலத்தில் மாற்ற முடியாததாய் இருக்கும் என்றுஞ் சொல்லவும் முடியாது. இயற்கை உணர்ச்சிக்கு இயற்கையின் தூண்டுதலால் ஏற்பட்ட ஆண் பெண் சம்பந்தமானது ஆத்மார்த்த காரணம் என்னும் பெயரால் கற்பிக்கப்பட்ட வைதிக சடங்குகளுக்குப் பிள்ளைகள் வேண்டுமென்றும், பொருளாதார உரிமை ஏற்பட்ட காலத்தில் தாங்கள் தேடிவைத்த செல்வங்களை அனுபவிக்க அல்லது விட்டுப்போக வாரிசு வேண்டுமென்றும் கருதியதாலேயே இன்றைய குடும்ப வாழ்க்கையும், இன்றைய கணவன் மனைவி முறை உரிமையும் ஏற்பட்டனவாயின. அவை சட்டமும், சமுதாய முறையும், பாதுகாத்து வருகின்றன. ஆத்மார்த்த உணர்ச்சியோ, பொருளாதார உரிமையோ மாற்றமடையும்போது சக்தி உரிமை உடைபடுகிற போது இன்றைய திருமண முறை கட்டுப்பாடு ஆகியவை மாறியே தீரும். ஆகையால் திருமண முறைக்காக நாங்கள் எந்தவிதமான திட்டங்களையும், மாற்றங்களையும் சொல்ல வந்தவர்களல்ல. அதற்காக இன்று நடந்துவரும் முறைகளில் நம்மை இழிவுபடுத்தவும், நம்மைச் சுரண்டவும், நம் அறிவைப் பாழ்படுத்தி நமக்கு இருக்கவேண்டிய மான உணர்ச்சியைக் கெடுத்து நம்மை அடிமைகளாக வாழ சம்மதிக்கச் செய்யும்படியான மதியற்ற, மானமற்ற காரியங்கள் தன்மைகள் ஒழியவேண்டும் என்பதேயாகும். இதை நன்றாக ஞாபகத்தில் வைக்க வேண்டுகிறேன்.

இதற்காக எல்லா காரியங்களையும்

ஒரே நாளில் செய்தாக வேண்டும் என்று நாங்கள் சொல்ல வரவில்லை. அவரவர்கள் அறிவும், அவரவர்கள் உணர்ச்சியும், அவரவர்கள் துணிவும் வலிவும் இடம்கொடுத்த வரையில் செய்ய வேண்டும் என்பதுதான் எங்களது ஆசை. இன்று இங்கு நடந்த திருமணம் கூடுமானவரையில் நான் திருப்தியடையத்தக்கதே யாகும். இது என்னுடைய அண்ணன் மகளுடைய திருமணம். மணமகனும் என்னுடைய கொள்கையில் மிகவும் பற்றுகொண்டவர். ஆனாலும் இத்திருமண நடப்பு விஷயத்தில் நான் எவ்வித பங்கும் எடுத்துக்கொள்ளவில்லை. முதலாவதாகச்சொல்லுகிறேன், மணமக்கள் இருவரும் தாங்களாகவே ஒருவரை ஒருவர் தெரிந்தெடுத்துக் கொண்ட திருமணம் இது. இதில் அவர்களுடைய பெற்றோர்களுக்காவது, எனக்காவது உண்மையில் எவ்வித முயற்சியும் இருந்ததில்லை. இந்தத் திருமணம் எப்படி நடைபெறும் என்பது இங்கு திருமணம் நடக்கும் நேரம் வரையிலும் எனக்கு ஒன்றும் தெரியாது. திருமணத்தை 'சிவில் மாரேஜ் ஆக்ட்'படி ரிஜிஸ்டர் (பதிவு) செய்யப்படும் என்பதும்கூட ரிஜிஸ்டரார் அவர்களைப் பார்த்த பிறகுதான் தெரிந்தது. இங்கு தாலி கட்டப்படவில்லை என்பதும் இப்பொழுதுதான் நான் தெரிந்துகொள்ள முடிந்தது. இன்னும் சொல்லுவேன், திருமணத்திற்கு அழைப்பு அனுப்பியதில் நான் சம்பந்தப்படவேயில்லை; யாருக்கு அனுப்பப்படவில்லை என்பதும் எனக்குத் தெரியாது. ஏன் என்று கேட்பீர்கள்? நான் இத்திருமணத்தை அவ்வளவு அலட்சியமாகக் கருதியதோடு, எப்படியோ நடந்து போகட்டும், இதில் நாம் ஏன் சம்பந்தம் வைத்துக்கொண்டு அது தப்பு, இது நடந்தது தப்பு, என்று வீணில் வருத்தப்படவேண்டும் என்றும் கருதியதோடு அவர்களுடைய நம்பிக்கைக்கும் திருப்திக்கும் மாறாக நம்முடைய சொந்த செல்வாக்கினால் ஏன் மனதிற்குச் சங்கடம் ஏற்படும்படியான நிர்ப்பந்தம் என்னும்படியான தொந்திரவு கொடுக்கவேண்டும் என்று கருதியே உண்மையில் கலந்துகொள்ளவில்லை; அதோடு கூடவே மணமக்கள் தங்களை தெரிந்தெடுத்துக் கொண்டதிலும்கூட நான் மணமகன் கருத்துக்கு விரோதமாக ஏதாவது சொல்லி அதை அவர்கள் நான் சொல்லிவருகிற கொள்கைக்கு விரோதமாக அவர்கள் இஷ்டத்திற்கு விரோதமாய் ஏதோ வலியுறுத்துகிறேன் என்பதாக எண்ண ஏற்படவேண்டும் என்று கருதியும் எல்லாவற்றையும் இயற்கைக்கு விட்டுவிட்டு நடப்பதுநடக்கட்டும் என்று இருந்துவிட்டேன். திருமணத்திற்கு சில நாட்களுக்கு முன்பு திருவண்ணாமலையில் மணமகன் என்னை கேட்டார், உங்கள் பெண்ணை மணக்க நான் ஆசைப்படுகிறேன் என்று. நான், என்னை ஏன் கேட்கிறாய்? அது பெண்ணைச் சேர்ந்த சங்கதி என்று பதில் சொன்னேன். அதற்குப் பதில், பெண் என்னை விரும்புகிறது என்று சொன்னார். அப்படியானால் அதற்கு எந்த விதமான தடையும் இருக்காது என்று பதில் சொல்லிவிட்டேன். பிறகு சமீபத்தில் வீட்டில் குறிப்பிட்ட மணமகன் பெயரைச் சொல்லி என்னைக் கேட்டார்கள். பெண் சம்மதித்தால் பிறகு அதைப் பற்றி என்னைக் கேட்பானேன் என்று அதற்கொரு வரியில் பதில்முடித்துவிட்டேன். இவ்வளவுதான் என் சம்மதம். எங்கள் வீட்டாருக்கும் இவ்வளவுதான் இருந்திருக்கும். ஆனால் காரியம் பெரும்பாலும் என் விருப்பம் போலவே முடிந்திருக்கிறது, மகிழ்ச்சியடையும் வண்ணமே நடந்துள்ளது. அதாவது தானாகத் தெரிந்தெடுத்த துணைவன் அதுவும் நல்ல பொருத்தமும், நல்ல குணமும் எனது கொள்கைகளில் பற்றும் உள்ள இளைஞன்; இரண்டாவது ரிஜிஸ்டர் முறை நடந்தது; மூன்றாவது தாலி கட்டாமல் மாலை மாற்றுவதோடு நிறைவேறியது. இவைகள் திருமணங்களில் இன்று முக்கியமாக இருக்கவேண்டும் என்பது எனக்கு ஆசை;

இதேமாதிரி எல்லா மணமக்களும் தாங்களாகவே நல்ல துணைவர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ள முடியுமா என்பது யோசிக்கத்தகுந்த காரியம்தான். ஏனெனில் நாம் பெரும்பாலும் பெண்மக்கட்குக் கல்வி கொடுக்காமலும், உலக ஞானமும் மக்கள் தன்மையும் உணர்ந்து கொள்ள வசதி யளிக்காமலும் இருந்து கொண்டு பெண்களை தங்களுக்கு இஷ்டப்பட்ட துணைவனைத் தெரிந்து எடுத்துக்கொள்ள உரிமையளித்தால் அது பெரிதும் திருப்தி யற்றதாகத்தான், பொருத்தமற்றதாகத்தான் வந்து முடியும். இந்தத் திருமணத்தில் பெண் தனது துணைவனைத் தெரிந்து எடுத்துக்கொள்வதில் போதிய சௌகரியமும் அறிவும் பெற்றிருந்தது. அதில் யாரும் குறுக்கிடவில்லை, அதற்கு வரும் கடிதங்கள் முதலியவைகளைப் பற்றி யாரும் கருத்து செலுத்தவோ, கண்காணிக்கவும்கூட முயற்சிக்கவில்லை. எனவே அதற்குப்பூரண உரிமை இருந்தது. அதனால் பெற்றோர்கள் கவலை எடுத்து செய்வதைப் பார்க்கிலும் மேன்மையான துணைவனைத் தெரிந்தெடுக்க முடிந்தது. ஆதலால் அம்மாதிரி வசதி பெண் மக்கட்கு மற்றவர்களும் கொடுக்கவேண்டும் என்று தான் ஆசைப்படுகிறேன். இந்தத் திருமணத்தில் கூடுமானவரை அதிக ஆர்ப்பாட்டமும் செலவும் இருக்கக்கூடாது என்பது எனது ஆசை. ஆனால் அதை ஈரோட்டில் நடத்தினால் அப்படிச் செய்ய முடியாமல் போகும் என்று கருதியே மணமகன் பெற்றோர்கட்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்துவிட்டோம். ஆனால் அவர் அதை ஆடம்பரமாகவே செய்யும்படி ஏற்பட்டுவிட்டது.

என்றாலும் இதில் மற்றொரு விஷயம். நாங்கள் கன்னட பலிஜிய நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்கள், மணமகன் தந்தை தோழர் சாமிநாயுடு தெலுங்கு பலிஜிய நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்கள். இப்படி இன்னும் எத்தனையோ ஜாதி ஒரே ஜாதிகள் பாஷைகள் மாறுபட்டும், பட்டங்கள் மாறுபட்டும் இருக்கின்றன. இதைவிட இன்னும் சிறு வித்தியாசங்கள், ஒரே ஜாதி ஒரே பாஷை இடங்களால் மாறுபட்டும் பிரிந்து இருக்கின்றன. வேளாளர்களில் கொங்கு வேளாளர், சோழிய வேளாளர் என்றும், ஆகாரத்தினால் மாறுபட்டு சைவ வேளாளர், சைவம் அல்லாத வேளாளர் என்றும், அதைவிட சிறு பேதமாக புத்தமல்லி, பொன்னேரி, தொண்டை மண்டலம், கொண்டைகட்டி என்றும் அர்த்தமற்ற பல பிரிவுகள் ஏற்பட்டு நாம் ஒவ்வொருவரும் ஒரு இனத்தையும், குலத்தையும் சேர்ந்தவர்கள் என்று வேறுபட்டு அடிமைப்பட்டு இழிநிலையில் இருக்கிறோம். இந்தத் தன்மைகள் மாறுவதற்குச் சிறிதாவது வழிகாணுகிறது இதனால்.

நாம் ஒரு இனம் என்பதில் ஆட்சேபணை இல்லை ஆனால் நாம் ஒரு வகுப்பு மக்கள் என்று ஆகாமல் ஒரு இன மக்கள் என்று சொல்லிக் கொள்வதால் ஒற்றுமை ஏற்பட்டுவிடாது. ஆதலால் ஒவ்வொருவரும் இம்மாதிரி ஒரு வகுப்பாக ஆக முயலவேண்டும். பிரிய வேண்டிய அளவுக்கு மேல் பிரிந்துவிட்டோம். இனி நாம் கூடுவதற்கு முயற்சிக்கவேண்டும். பழையவைகளை எதிர்ப்பது என்பது, போராடுவது என்பது அர்த்தமற்ற பேச்சாகும். நம் வாழ்க்கையில் பழயவைகளோடு போராடிக் கொண்டும் எதிர்த்தும், மாற்றிக்கொண்டும்தான் இருக்கிறோம். கூடுமானவரை பழமையைவிட சிறிது மேன்மையான நிலையில்தான் இருக்கிறோம். இது இயற்கை. மனிதன் நாளுக்குநாள் அறிவு பெற்று வருகிறான், தனி மனிதன் எப்படி அறிவு பெற்று வருகிறானோ அது போலவே மனித சமுதாயம் நாளுக்கு நாள் அறிவு பெற்று வருகிறது.

ஒரு குறிப்பிட்ட துறையை எடுத்துக் கொண்டால் 1000 வருடம், 500 வருடம் அல்லது 100 வருடத்திற்கு முன் இருந்ததைவிட அந்தத் துறை எவ்வளவோ மாற்றமும் முற்போக்கும் அடைந்திருக்கிறது. சக்கிமுக்கிக்கும், மின்சாரத்திற்கும், கட்டைவண்டிக்கும், ஆகாயக் கப்பலுக்கும், ஈட்டி, கவண்கல்,

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா

திருச்செங்கோடு திராவிடர் கழகம்

ஆண்டுவிழாவும் பொதுக் கூட்டமும்

திருச்செங்கோடு:- 3-6-45 காலை பெரியார் அவர்கள் ஈரோட்டிலிருந்து சங்ககிரி துர்க்கம் வழியாக திருச்செங்கோடு சென்றார்கள். அங்கு வி. வி. சி. ஆர். வையாபுரி முதலியார் ஜின்னிங் பாக்டரியில் தங்கியிருந்தார். காலை சிற்றுண்டிக்குப்பின் பெரியார் ஈ. வெ. ரா., கவிஞர் பாரதிதாசன், தோழர்கள் டி. பி. வேதாசலம், இரா. நெடுஞ்செழியன், பி. ஜனார்த்தனம் முதலியோர் இன்னியங்கள் முழங்க பற்பல மலர்மாலைகள் அணிவித்து ஊர்வலமாக திராவிடர் கழகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஊர்வலம் வாழ்த்தொலிகளோடு இனிது நடைபெற்றது. பிறகு காலை 10-மணிக்கு திருச்செங்கோடு திராவிடர் கழக முதலாவது ஆண்டுவிழா தொடங்கப் பெற்றது.

முற்பகல் நிகழ்ச்சி:-

திருச்சி வழக்கறிஞர் டி. பி. வேதாசலம் அவர்கள் திராவிடர் கொடியினை ஏற்றுவிக்குமுகத்தான் கொடியின் இன்றியமையாமை, அதன் தத்துவங்கள் முதலியவற்றை விளக்கினார்கள்.

பிறகு புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமை ஏற்று சுமார் 1மணி நேரம் தலைமை முன்னுரையினை நிகழ்த்தினார்கள்.

பின்னர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திராவிடரும் ஆரியரும் கலந்துவிட்டனர் எனக் கூறும் போலிகளின் கூற்றினை மறுத்து தக்க ஆதாரங்களுடன் ஆரிய திராவிட வேறுபாட்டினைப் பிரித்துக் காட்டி நாட்டுப் பிரிவினையின் இன்றியமையாமையினை எடுத்துக் காட்டி திராவிடநாட்டுப் படத்தைத் திறந்து வைத்தார்கள்.

பிறகு $1\frac{1}{2}$ மணிக்கு இடைவேளை உணவுக்காகக் கூட்டம் கலைந்தது.

பிறகு $3\frac{1}{2}$ மணிக்குப் பிற்பகல் நிகழ்ச்சி தொடங்கியது.

தோழர் இரா. நெடுஞ்செழியன் சர் ஏ. டி. பன்னீர் செல்வம் படத்தைத் திறந்துவைத்தார். பின்னர் தோழர் பி. ஜனார்த்தனம் அவர்களும், புலவர் மா. நன்னன் அவர்களும் பேசினர். பின்னர் தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

விழாவில் கலந்துகொண்ட பெரியார் ஈ. வெ. ரா., கவிஞர் பாரதிதாசன், டி. பி. வேதாசலம், இரா. நெடுஞ்செழியன் ஆகியோருக்குத் திராவிட கழகத்தினரால் வரவேற்பிதழ்கள் படித்தளிக்கப்பட்டன.

மாலை 7 மணிக்கு சாற்பதுகால் மண்டபத்திற்கு முன் தோழர் கண்ணன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அப்போது தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கடவுள், மதம் ஆகியவற்றைப் பற்றியும், பி. ஜனார்த்தனம் அவர்கள் காங்கரஸ், கம்யூனிஸ்ட் ஆகியோரின் வாய்மையைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

பின்னர், பெரியார் அவர்கள் திராவிடர்கழக கொள்கைகளைப் பற்றி சுமார் $2\frac{1}{2}$ மணி நேரம் சொற்பெருக்காற்றினார்கள். மேடையின் பின்புறமும் முன்புறமும் பெருவாரியான மக்கள் கூடியிருந்தபோதிலும் இருபுறமும் ஒலிபெருக்கிகள் அமைக்கப்பட்டிருந்தமையின் கூட்டம் திறம்பட நடைபெற்றது. மற்றும் பெரியார் அவர்களின் உணர்வுததும்பும் சொற்பொழிவில் ஈடுபட்டிருந்த மக்கள் அனைவரும் இடையில் வந்த மழையினையும் பொருட்படுத்தாது அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. மாக்கடலடையின் மனம் மாட்சியடையும் படியான மாண்புமிக்க பெரியார் அவர்களின் சொற்பொழிவின் திறத்தால் ஊரிலேயே ஓர் புத்துணர்வு பூத்திருக்கின்றது.

பின்னர் தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் வீட்டிலிருந்து ஒலிபெருக்கிக்குக் கொடுக்கப்பட்ட மின்சார வசதி கூட்டம் நடந்து கொண்டிருக்கையில் சில சூழ்ச்சிக்காரரால் நிறுத்தப்பட்டு, கழகத் தலைவர் அவர்களின் வீட்டிலிருந்து மீண்டும் வசதிபெற்று நடத்தப்பட்டது.

திருச்செங்கோடு வி. வி. சி. ஆர். எம். ஆறுமுகம், வி. வி. சி. பி. வி. பொன்னுசாமி, பரமசிவம், என். கே. பி. வேல் ஆகியோரின் உழைப்பு பாராட்டத்தக்கது.

"புரோகித ஒழிப்பு"

(நாடகம்)

மணக்கால் திராவிடர் கழகத்தினரால் வையூர் மண்டபத்தில் 15-5-45-ந் தேதி 'புரோகித ஒழிப்பு' என்ற நாடகம் தோழர் ம. சி. சோமசுந்தரம் தலைமையில் அதிவிமரிசையாக நடத்தப்பட்டது. வெளியூர்களிலும் நடத்துவதென முடிவு செய்திருக்கிறார்கள். மற்றும் இவ்வருடம் முதலாவது ஆண்டு விழாவின் போது பெரியார் அவர்கள் தலைமையில் இதைச் சிறப்புற நடத்துவதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஜப்பானியரை ஒழிக்க!

ரேடியோ செய்திப்படி, சேனைப்படைகள்,
நாளொன்றுக்கு ஒரு டிவிஷன் வீதம்
மேற்கிலிருந்து கிழக்குநோக்கி வந்துகொண்டிருக்கிறது.

★

இதனால்
துருப்புகளின் சௌகரியங்களுக்குத் தேவை எவ்வளவு
அதிகரிக்கிறது என்பதைச்சற்று எண்ணிப்பாருங்கள்!

ஆகவே
"துருப்புகளின் சௌகரியங்களுக்கு"
என்ற தலைப்பில்

மே. த. கவர்னர்

யுத்த நிதிக்கு

தயவுசெய்து பணம் கொடுத்துதவுங்கள்.

குடி அரசு

1945-ஆம் ஜூன் ௴ 9௳

C. R. ஆச்சாரியார்

டாக்டர் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் வடநாட்டாரின் சாவகாசம் கூடாது என்கின்ற முடிவுக்கு 2, 3 வருஷங்களுக்கு முன்பே வந்துவிட்டார். தோழர் சுபாஷ் சந்திரபோஸ் இருந்தது எப்படி ஜவஹர்லால் பண்டிதருக்கு பெரியதொரு தொல்லையாய் இருந்து அவரை காங்கிரசிலிருந்து ஒழித்துவிட வேண்டுமென்கின்ற கவலை பண்டிதர் கூட்டத்திற்கு இருந்து வந்ததோ, அது போலவே ஆச்சாரியார் இருப்பதும் பண்டிதர் கூட்டத்திற்குத் தொல்லையாகவே இருந்துவருகிறது. காரணம், போஸ் அவர்கள் உண்மையான, திட்டமான, தெளிவான கொள்கையைக் கொண்டவர். காந்தியாரையோ ஜவஹர்லால் பண்டிதரையோ மரியாதைக்கு ஆக போஸ் அவர்கள் மதிப்பவரல்ல. இவர்களின் தந்திரம் அடிக்கடி போஸினால் வெளிப்படுத்தப்பட்டு விடுவதுண்டு. அது போலவே ஆச்சாரியார் தெளிவான புத்தி உடையவர், அதிலும் எப்படியாவது அவரது புத்திக்கு ஏற்றபடி காரியத்தைச் சாதித்துக் கொள்ள சக்தியுடையவர். காந்தியார் திட்டமானாலும், பண்டிதர் திட்டமானாலும் ஆச்சாரியாருக்கு பிடிக்கவில்லையானால், அது செல்லாத நாணயமாக ஆகிவிடும். ஆச்சாரியாருக்கு அவரது புத்தி கூர்மையையும் தந்திர சக்தியையும் விட மற்றொரு "வரப்பிரசாதம்" அதாவது "தலைமை" உண்டு. அதாவது உண்மையில் களங்கமற்ற-நிபந்தனை அற்ற தியாகம் அல்லது தன்னலம் துறத்தல் என்கின்ற வரப்பிரசாதம் ஆகும். இந்த வரப்பிரசாதமானது அவர் புத்தி கூர்மையில் சிறிது குற்றமேற்பட்டாலும் தந்திரசக்தியில் சிறிது குறை ஏற்பட்டாலும் அதை சரிப்படுத்தி விடுகிறது.

ரோஜா முத்தையா

ஆதலால், இவை ஒன்றும் இல்லாத பண்டிதருக்கும் அவரது கூட்டத்தாருக்கும் ஆச்சாரியார் தொல்லையாளராயிருப்பதில் அதிசயமில்லை.

உண்மையில் காந்தியாருக்குத் 'தெய்வீக'த் தன்மையும் அது பற்றிய விளம்பரமும், பண்டிதருக்குக் காந்தியார் சலுகையும் விளம்பரமும் இல்லாமல் இருக்குமானால், இவர்களைப் பற்றிப் பேசவேண்டிய அளவு பிரபலம்கூட இவர்களுக்கு ஏற்பட்டிருக்காது. இந்த விஷயம் நாமாகவே சொல்லுவதல்ல. 'இந்து', 'சுதேசமித்திரன்' பத்திரிக்கைகளில் சில சமயங்களில் இவர்களைப் பற்றி வெளியான விமரிசனங்களைப் பார்த்தாலே தெரிந்துவிடும். மற்றும் வடநாட்டு தேசியப் பத்திரிக்கைகள் என்பவைகளே நன்றாய் தெளிவாய் எழுதி இருக்கின்றன.

ஆனால் தோழர் ஆச்சாரியாரைப் பற்றி, இதுவரை எப்படிப்பட்ட எதிரியும் ஆச்சாரியாருக்குப் புத்தி இல்லை என்றோ, அவர் சுயநலக்காரர் என்றோ, விளம்பரக்காரர் என்றோ, வெத்துவேட்டு வீரர் என்றோ சொல்ல வந்ததில்லை.

ஆதலால் வடநாட்டு மகாத்மாக்கள், வீரர்கள் என்பவர்களின் எப்படிப்பட்ட சரக்கும் ஆச்சாரியார் சரக்குக்கு மேல் செல்லுபடி ஆவதில்லை. இதனால் வடநாட்டார், ஆச்சாரியார் மேல் வெறுப்பும் பகைமையும் கொள்ளவேண்டியதாயிற்று. இந்த வெறுப்பும் பகைமையும் 20 வருஷங்களுக்கு முன் அதாவது 1924, 25-ம் வருஷங்களிலேயே ஆச்சாரியார் மேல் வடநாட்டாருக்கு இருந்துவந்ததென்றே சொல்லலாம். ஆனால் அப்போது வடநாட்டாரில் ஆச்சாரியாருக்கு ஒரு சில கைகள் ஆதரவிருந்தது. இப்போது வரவர அடியோடு அது சிதைந்து விட்டது. காந்தியாருக்கும் ஆச்சாரியாருக்கும் சம்மந்தி உறவு முறை ஏற்படாமல் இருந்திருக்குமானால் ஆச்சாரியார் வெகுநாள்களுக்கு முன்பே விலகி இருப்பார் அல்லது விலக்கப்பட்டிருப்பார். அல்லது காங்கிரசானது தேர்தலில் ஜெயிக்காமல் இருந்திருந்தாலும் நிலைமை வேறுபட்டிருக்கும். இந்த காரணங்களே ஆச்சாரியாரை 1940 வரை வடநாட்டாருடன் உறவு கொண்டாடச் செய்தது. இப்போது இரண்டுபேர் சங்கதியும் இரண்டுபேருக்கும் தெரிந்துவிட்டது. வடநாட்டார் பொருளாதாரலம் குறிப்புவைத்து அரசியலை நடத்துகிறார் என்பதும், தென்னாட்டார் பார்ப்பன ஆதிக்கத்தைக் கருத்தாக வைத்து அரசியலை நடத்துகிறார் என்பதும் இருவருக்கும் விளங்கிவிட்டதோடு, அறிவும் தந்திரமும் தென்னாட்டாருக்கு இருக்கிறது என்கின்ற பொறாமையும் சேர்ந்துவிட்டதால் ஆச்சாரியாருக்கு வடநாடு பிடிக்காமல் போகவேண்டியதாகி விட்டது.

தவிர காந்தியாருக்கும் பண்டிதருக்கும் தாங்கள் சாகும் வரை தங்கள் விளம்பரமே இலட்சியமாக ஆகிவிட்டது. அதனாலேயே அவர்கள் காரியத்திற்கு ஏற்ற கொள்கையும் கைகூடும்படியான திட்டமும் இல்லாமல் விளம்பரத்தேரை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி இருப்பதில் அவர்களுக்கு நட்டமும் இல்லை; ஒரு காசாவது கை முதல் போட்டவர்களுமல்ல; ஒரு பொட்டு வேர்வையாவது விடும்படி பாடுபட்டவர்களுமல்ல. ஆச்சாரியார் அப்படிப்பட்டவரல்ல; "கை முதல்" போட்டவர்; தன்னிடம் உள்ளதை எல்லாம் போட்டவர்; ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் உழைத்தவர். விளம்பரத்தை ஒரு பலனாகவோ அல்லது அதை எதிர்பார்ப்பவராகவோ இருப்பவரல்ல. ஆதலால் அவருக்கு ஏதாவது ஒரு பலன் ஏற்படவேண்டும் என்கின்ற ஆசை உண்டு. ஆனால் இன்று இருப்பதுபோலவே ஆச்சாரியார் இன்னும் 20 ஆண்டு இருந்தாலும் இந்த நிலையில்தான் ஆச்சாரியார் சாவாரே ஒழிய, ஆச்சாரியார் போட்ட முதலுக்கும், பட்டபாட்டுக்கும் எவ்வித பலனும் அடையப் போவதில்லை என்பதோடு ஏற்படப்போவதுமில்லை. வெட்டி விளம்பரமும், வீண் ஜம்பமும் ஒருவனுடைய இலட்சியமாய் இருந்து பொதுவாழ்வில் கலருவானானால் அவன் ஆச்சாரியாரைப் போல் தன்னலம்விட்டு தகுதிக்கு உழைக்கவேண்டியதில்லை. அப்படி உழைப்பது முட்டாள்தனம் என்றுகூட சொல்லலாம். ஏனெனில் ஆச்சாரியாருக்கு உண்மையான விளம்பரத்திற்கு அறிவு

இருக்கிறது. வீண் ஜம்பம் இல்லாமல் உண்மையான பெருமைக்கு ஏற்றதன்மை சவுகரியம் இருக்கிறது. அதற்கு சாதாரணமாக நம் நாட்டு செல்வவான்களைப்போல சகலசமய சஞ்சிகைகள் லிமிட்டெட் கம்பெனி போல நடந்து கொண்டால்போதுமானதாக இருக்கும். எனவே, ஆச்சாரியார் இத்தனை நாள் நடந்துகொண்ட தன்மையும் அவரது உழைப்பும் அவரை ஏமாற்றிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். எனவே, ஆச்சாரியார் நல்ல தியாகம் செய்தவர், நல்ல அறிவாளி, நல்ல தந்திரசாலி, நல்ல உழைப்பாளி என்று சொல்லும்படியான அளவுக்குத்தான் தகுதி உடையவரானாரே தவிர, அப்படிப்பட்ட அவரால், அப்படிப்பட்ட அவரது தொண்டால் ஆன காரியம் என்னவென்றால் (0) பூஜ்ஜியம் என்கின்ற அளவில்தான் இருக்கிறார். அவர் தியாகமும், அறிவும், தந்திரமும், உழைப்பும் இப்படிப் பூஜ்ஜியம் என்கின்ற பயனைக் கொடுக்குமானால் அவரை எப்படிப் புத்திசாலி என்றுசொல்லமுடியும்என்று நாமே சந்தேகப்படுகின்றோம். ரிசர்வ்பாங்கு அதிகப் பணம் படைத்ததுதான், யாருக்கு என்ன பயன்? அதுபோல் ஆச்சாரியார் மகாபுத்திசாலிதான், அதிக ஓட்டுப் படைத்தவர், யாருக்கு என்ன பயன்? என்றாகிவிட்டது.

இந்தத் தவறை உணர்ந்துதான் இப்போது ஆச்சாரியார் தான் சாவதற்குள் ஏதாவது பலன் ஏற்படும்படியான காரியம் செய்துவிட்டுப் போகலாம் என்று கருதி சிறிது நாட்களாக சில குறிப்புகளைக் காட்டி வருகிறார் என்று கருதுகிறோம்.

சிறிது நாட்களுக்கு முன்பு திராவிட நாடு தனி நாடாக இருப்பது பற்றிய தனது சம்மதத்தை காட்டினார். இப்போது "ஜாதி ஒழிவதற்கு ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்" என்று சொன்னார். இதை நாம் உண்மை என்று கருதுகிறோம். ஆனால் பலர் இது பதவி பெறுவதற்கு ஒரு தந்திரம் என்கிறார்கள். இது தந்திரமாக இருக்கமுடியாது. அவரது நிலைமையை தன்மையை நன்றாக அறிந்தவர்கள் அப்படிச் சொல்ல மாட்டார்கள். அவருக்கு ஏதாவது பலன் காண வேண்டும் என்கின்ற அவசியம் ஏற்பட்டுவிட்டதாகவே அவரது சிறிது கால நடவடிக்கை பேச்சு ஆகியவைகளில் இருந்து அறிகிறோம். அவரை வடநாட்டார் இனி சேர்க்கமாட்டார்கள், நம்பவுமாட்டார்கள். அந்த நிலையில் இன்னமும் சுயராஜ்ஜியம் பொது உடைமை என்கின்ற போலிப் பேச்சுகளை பேசிக்கொண்டு திரிய இடம் கிடைக்கமாட்டாது.

ஆனால் அவர் காங்கரசைவிட்டு வெளியில்வந்துவிடுவாரா என்று சிலர் கேட்கக்கூடும். வந்துவிட்டார் என்றே சொல்லும் நிலையில் இருக்கிறார். மறுபடியும் அவர் இனி சேர்வதானால் அவர் டாக்டர் வரதராஜுலு 'டைப்' தேசியவாதியாக அல்லது கல்யாணசுந்தர முதலியார் 'டைப்' தேசியவாதியாகத்தான் காங்கரஸ்காரராக இருக்க முடியுமே ஒழிய வேறு விதமாக இருக்க முடியாது.

எனவே, அவர் இனி தனது பின்பற்றுவோரை தனக்கு நம்பிக்கை உள்ளோரைக் கொண்டு ஏதாவது பயனுள்ள பணி ஆற்ற முனையக் கூடும் என்று கருதுகிறோம். அவருக்கு உள்ள 'தலைமை' வேறு ஒருவருக்கும் இந்தியா முழுவதிலேயும் இல்லை என்பதைப் பந்தயங்கட்டிக் கூற முடியும். ஆனால்......

திராவிடர் கழகத்திற்கு
(ஜஸ்டிஸ் கட்சிக்கு)
9-6-45ந் தேதி வரை 32771 அங்கத்தினர்கள் ரூ. 3264—2—0 சந்தா

ஜூன் மாதம் 9-ந் தேதி வரை திராவிட கழகத்திற்(ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

1. கோவை	5825	9. சென்னை	1747
2. தஞ்சை	5804	10. மதுரை	1456
3. சேலம்	4460	11. செங்கல்பட்டு	856
4. திருச்சி	3950	12. திருவிதாங்கூர், (நாஞ்சில்நாடு)	192
5. இராமநாதபுரம்	2293	13 பெங்களூர்	169
6. திருநெல்வேலி	2149	14. புதுக்கோட்டை	95
7. தென் ஆற்காடு	1947		
8. வட ஆற்காடு	1828		

ஆகமொத்த அங்கத்தினர்கள் 32771. சந்தா ரூ. 3264-2-0.

16-வது திருச்சி ஜில்லா திராவிட கழக மாநாடு

17-6-45 ஞாயிறு முனிசிபல் மண்டபத்தில் காலை 9மணிமுதல்.

தலைவர் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ.,

கொடியேற்றுபவர்: தோழர் சத்தியவாணி அம்மாள்.

திறப்பாளர்: தோழர் கல்யாணசுந்தரனார், புதுவை.

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும் இயக்கத் தோழர்களும் பங்குகொள்வார்கள்.

என். சங்கரன்,
வரவேற்பு கழகத் தலைவர்.
தி. பொ. வேதாசலம்,
அமைச்சர்.

மாலை: பொதுக்கூட்டம் டவுன் ஹால் முன். அன்று இரவு 10 மணிக்கு சுயமரியாதை இயக்க அன்பர்கள் கூட்டம் டவுன் ஹாலில் நடைபெறும்.

ஒத்தி வைப்பு

பெங்களூர் நகரில் 10-6-45ந் தேதி நடக்கவிருந்த திராவிடர் கழகக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்றும் டை கழகச் செயலாளர் அறிவிக்கிறார்.

திராவிட மாணவர் பிரசாரம்

மதுரை: 24-5-45 வாடிப்பட்டியில் தோழர் எஸ். அப்பையா தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. தோழர் பட்டினத்தார் இயக்கப் பாடல்கள் பாடினார். மாணவத் தோழர்கள் கி. தியாகராசன், ராமானுஜம், து. பெரியசாமி, ஹபிபுல்லா, வீரராசன் ஆகியோர் சொற்பெருக்காற்றினார்கள். சென்னையில் நடந்த போலி ஜஸ்டிஸ் மகாநாட்டைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தோழர் வ. சு. ஜெயமின் நன்றி கூறினார்.

28-5-45 வத்தலக்குண்டு ரேடியோ மைதானத்தில் தோழர் ரா. ஜெயராமன் தலைமையில் தோழர் பட்டினத்தார் பாரதிதாசன் பாடல்பாடியபின் மாணவத் தோழர்கள் ஹபிபுல்லா, ராமானுஜம், தியாகராசன் ஆகியோர் விளக்கமாகப் பேசினர்.

இராமநாதபுரம்: 31-5-45 அருப்புக்கோட்டையில் தோழர் முத்து நாடார் தலைமையில், மாணவத் தோழர்கள் தியாகராசன், பெரியசாமி, இராமனுஜம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

1-6-45 முத்துராமலிங்கபுரம் பகுத்தறிவுச் சங்க முன்னிலையில் ஷை சங்கத் தலைவர் தலைமையில் மாணவத் தோழர்கள் பேசினர்.

2-6-45 இரவு 10 மணிக்கு சமுதி நாடார் வித்யாபிவிருத்தி சங்கத்தினாதரவில் தோழர் சொக்கலிங்க பாண்டியன் தலைமையில் மாணவத் தோழர்கள் சொற்பெருக்காற்றினர்.

கோயமுத்தூர்: 17-5-45-ல் பெருந்துறையில் தோழர் கருப்பு தலைமையில் தோழர்கள் ஜி. எஸ். ராஜு, புலவர் வீரவாகு, எஸ். தவமணி இராசன் ஆகியோர் பேசினர்.

18-5-45 திருப்பூர் கொய்யகாரத்தில் தோழர் குரு. ராமலிங்கம் தலைமையில் தோழர்கள் ஜோப், ஈ. வெ. கி. செல்வன், ஜி. எஸ். ராஜு, எஸ். தவமணி இராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

19-5-45 சென்னிமலையில் தோழர் ஜி. எஸ். ராஜு தலைமையில் தோழர்கள் ஜோப், ஈ. வெ. கி. செல்வன், எஸ். தவமணி இராசன் சொற்பொழிவாற்றினர் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

தஞ்சாவூர்: (தஞ்சை தாலுக்கா) 19-5-45 மாலை 7 மணிக்கு ஆஸ்பத்திரிக்கு எதிர் மைதானத்தில் தோழர் எஸ். எஸ். மணி தலைமையில் தோழர்கள் ஆர். சந்தானம், து. மா. பெரியசாமி ஆகியோர் பேசினர். கரந்தை திராவிட வாலிபர் கழகச் செயலாளர் நன்றி கூறினார்.

20-5-45 பூதலூரில் கரந்தைப் புலவர் தோழர் ராமநாதன் தலைமையில் தோழர்கள் அரங்கண்ணல், து. மா. பெரியசாமி, எஸ். ஆர். சுப்பண்ணா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

(நாகை, நன்னிலம், திருத்துறைப்பூண்டி பகுதி)

9-5-45 பின்னவாசலில் தோழர் எஸ். தவமணி இராசன் தலைமையில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டது. தோழர்கள் கோவிந்தசாமி, பொன்னுசாமி ஆகியோர் முறையே தலைவராகவும், செயலாளராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். தோழர் சண்முகம் தலைமையில் தோழர்கள் திருஞானசம்பந்தம், தவமணி இராசன், முத்துகிருட்டினன், அரங்கண்ணல் ஆகியோர் விரிவுரையாற்றினர்.

18-5-45 நாகூரில் தோழர் குருசாமி தலைமையில் மாணவத் தோழர்கள் திருஞானசம்பந்தம் (சென்னை) அரங்கண்ணல் (ஆரூர்) வெற்பாசன் (ஐயம்பேட்டை) சுந்தரமூர்த்தி (குடந்தை) புலவர் க. சு. மணி (தஞ்சை) ஆகியோர் சொற்பொழிவாற்றினர். சிறுவன் மதியழகன் நன்றி கூறினார்.

19-5-45 தரங்கம்பாடியில் தலைமையாசிரியர் தோழர் சாலமன் பி. ஏ., எல். டி., தலைமையில் மாணவத் தோழர்கள் பேசினர். தோழர் இளஞ்செழியன் நன்றி கூறினார்.

20-5-45 பொறையாற்றில் ஆசிரியர் தோழர் சோமசுந்தரம் தலைமையில் மாணவத் தோழர்களும், தோழர் சுந்தரேசனும் பேசினர்.

21-5-45 ஆயப்பாடியில் இம்மாவட்ட அமைப்பாளரான தோழர் வி. எஸ். பி. யாகூப் தலைமையில் மாணவத் தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

22-5-45 தில்லையாடியில் தோழர் கோவிந்தராச தலைமையில் பகுத்தறிவுக் கழக ஆண்டுவிழாவில் மாணவத் தோழர்களும், தோழர் து. மா. பெரியசாமி ஆகியோரும் விரிவுரையாற்றினர்.

23-5-45 நாகபட்டினத்தில் தோழர் டி. பி. ஆறுமுகம் தலைமையில் மாணவத் தோழர்கள் சொற்பொழிவு செய்தனர்.

24-5-45 நாகையில் இருந்து வைக்கினிக் வந்த மாணவத் தோழர்களான சுந்தரேசன், அரங்கண்ணல், து. மா. பெரியசாமி, வெற்பாசன், புலவர் க. சு. மணியம் ஆகியோர்களும், தோழர் ஜி சண்முகசுந்தரம் (சண்முகானந்த பிரஸ்) தலைமையில் முன்னி ஆற்றில் நடந்த கூட்டத்தில் பேசினர். தோழர் ஹாஜா பீர் நன்றி கூறினார்.

25-5-45 தானிக்கோட்டகத்தில் தோழர் ரெத்தினசபாபதி தலைமையில் நமது மாணவத் தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

26-5-45 தகட்டூரில் தோழர் வேலாயுதம் தலைமையில் மாணவத் தோழர்கள் பேசினார்கள்.

27-5-45 கரியாபட்டணத்தில் தோழர் சந்தானம் தலைமையில் மாணவத் தோழர்கள் விளக்கமாக நீண்ட சொற்பொழிவாற்றினார்கள்.

ஷை கூட்டங்கள் யாவற்றிலும் 7, 8-5-45-ல் சென்னையில் சர். சண்முகம் தலைமையில் நடந்த போலி மகாநாட்டைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(இதர கூட்டங்களின் செய்திகள் அடுத்த வாரம்.)

தென்னாற்காடு: (விருத்தாசலம், சயங்கொண்டம் பகுதி.)

24-5-45 ஜெயங்கொண்டத்தில் தோழர் பாஸ்கரன் தலைமையில் புலவர்கள் விண்ணார்தாயனார், எழில் நிலவன், சிறுவர் வீரமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

25-5-45 மீன்சுருட்டியில் நடைபெற்ற தோழர் தம்புசாமி திருமணத்தில், புலவர் குருசாமி தலைமையில் தோழர்கள் பாஸ்கரன், புலவர் விண்ணார்தாயனார், தோழர்கள் இராமாமிர்தத்தம்மாள், வீரமணி ஆகியோர் விரிவுரையாற்றினர்.

அன்று மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர் எம். பாஸ்கரன் தலைமையில் புலவர்கள் குருசாமி, விண்ணார்தாயனார், தோழர்கள் வீரமணி, இராமாமிர்தத்தம்மாள் ஆகியோர் பேசினர்.

26-5-45 மாலை உதயநத்தம் தோழர் கனகசபை தலைமையில் தோழர்கள் பாஸ்கரன், வீரமணி, புலவர் விண்ணார்தாயனார் சொற்பெருக்காற்றினர்.

27-5-45 மாலை கங்கைகொண்ட சோழபுரம் தோழர் கோவிந்தசாமி தலைமையில் தோழர்கள் பாஸ்கரன், வீரமணி, புலவர் விண்ணார்தாயனார் ஆகியவர்கள் விரிவுரையாற்றினார்கள்.

(சுற்றுப் பிரயாணம் செய்யும் மாணவர்கள் தங்கள் கூட்டங்களின் நிகழ்ச்சிகளைத் தவறாது எழுதியனுப்பக் கோருகிறோம்.)

இராமநாதபுரம் மாவட்டத்தில் தோழர்கள் கே. தியாகராசன், து. பெரியசாமி, ஆர். ராமானுஜம் ஆகிய மூவரும் 31-5-45 முதல் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள்.

வடஆர்க்காடு மாவட்டத்தில் தோழர்கள் எ. பி. ஜனார்த்தனம், புலவர் நன்னன், திருவத்திபுரம் தேவராசன் ஆகிய மூவரும் 7-6-45 முதல் 26-7-45 முடிய சுற்றிப் பிரசாரம் செய்து வருகிறார்கள். கூட்டம் நடத்தும் தோழர்கள் மூன்று நாட்களுக்கு முன்னதாகவே உள்ளூர் போலீஸ் சப்இன்ஸ்பெக்டருக்கு தகவல் தெரிவிக்கவேண்டுமென்பது ஜில்லா கலெக்டரின் உத்திரவாகையால் அதற்குத் தக்க ஏற்பாடுசெய்ய வேண்டுகிறோம்.

சுற்றுப்பிரயாணத் திட்டம் பின்வருமாறு:-

10-6-45 திருப்பத்தூர்
11- ஜோலார்பேட்டை
12- வாணியம்பாடி
13- ஓய்வு
14- ஆம்பூர்
15- வேலூர்
16- ஆரணி
17- போளூர்
18- வில்வாரணி
19- ஓய்வு
20- திருவண்ணாமலை
21- வந்தவாசி
22- திருவத்திபுரம்
23- ஓய்வு
24, 25, 26, பின்னர். மற்ற விபரங்களுக்கு:

வி. எம். இராசமாணிக்கம், அமைப்பாளர், வ. ஆ. மாவட்ட திராவிடர் கழகம், திருப்பத்தூர். (N. A.)

* *

இவ்வாண்டு திராவிட மாணவர் சுற்றுப் பிரயாணத்தில் கலந்துகொண்டவர்களில் தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ, பட்டமும், தோழர்கள் மா. நன்னன், க. சு. மணியம் ஆகியோர் புலவர் பட்டமும் பெற்றுள்ளனர். தோழர் இரா. இளவழகு பி. ஏ., (ஆனர்ஸ்) Preliminary தேர்விலும், தோழர்கள் ப. வெ. பாபசன், ஆர். ராமானுசம் ஆகியோர் எஸ். எஸ். எல். சி. தேர்விலும் வெற்றி பெற்றுள்ளனர் என்ற செய்திகளைக் கேட்டு மகிழ்கிறோம்.

செயலாளர், திராவிட மாணவர் பிரசாரக் கழகம், ஈரோடு.

பொதுநலச்சங்க மாநாடு

சின்னக்காம்பட்டியில் பொதுநலச் சங்க மாநாடு 21, 22-5-45 இரண்டு நாட்களிலும் அடிகளார் சிவநேசம் அவர்கள் தலைமையில் கூடி இனிது நிறைவேறியது. மாநாட்டைத் திறப்பாளர் தோழர் அர்ச்சுனன் அவர்கள் வரும் வழியில் சீர்கெட்டு வரமுடியாமைக்குத் தந்திச் செய்தி கிடைத்த பின்னர் தோழர் அருணாசலக் கவுண்டர் பி. ஏ., பி. எல்., அவர்கள் (E. A. R. O.) மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசினார். அவர்கள் சார்பாக தோழர் அர்ச்சுனன் அவர்கட்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் குறிப்பிட்டுள்ள சொற்பெருக்காளர்கள் வந்து தம் தம் கடமைகளைச் செய்தனர். பல கிராமப் பெருமக்கள் மாநாடு முடியும் வரை இரண்டு நாட்களிலும் நிரம்பக் கூடியிருந்தனர். மாநாட்டில் பதினைந்து தீர்மானங்கள் சில சிறு திருத்தங்களுடன் நிறைவேறின. தோழர் ஏ. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எம். எல்., அவர்களும், மதுரை ஜில்லா போர்டு வைஸ்பிரசிடெண்ட் எஸ். கே. ராஜன் அவர்களும் இயற்கை எய்தினமைக்காக அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. நாட்டுச் சேவைக்கான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டின் போது இரண்டு இரவுகளிலும் சங்கரலி நாடக அபிமானிகளால் சீர்திருத்த நாடகம் இனிது நடத்தப்பெற்றது. மாநாட்டில் கலந்துகொண்ட எல்லாப் பேரன்பர்களுக்கும் இரண்டு நாட்களிலும் காலை மாலை இரவு நேரங்களில் இனிய உண்டி முதலிய வசதிகளை கோயில் நிர்வாகத் தலைவர் ப. சி. வே. கிருஷ்ணசாமி மிகப் பரிவுடன் நடத்திய சேவை பாராட்டற்குரியதே. மாநாட்டிற்கு வந்து சென்ற அன்பர்களின் போக்குவரவு வசதிகட்கு V. M. S. முதலாளி அவர்களின் முன்னேற்பாடான உதவியை இம்மாநாடு பாராட்டியது.

22-5-45 இரவு ஒரு மணிக்கு அவைத் தலைவர் அடிகளார் சிவநேசம் அவர்களின் நீண்ட முடிவுரையுடன் மாநாடு இனிது நிறைவேறியது. மாநாட்டின் நினைவாகக் 'குடி அரசு'க்கு ரூ 1 நன்கொடையளிக்கப்பட்டது.

மறைவு

ஓமலூர் பெருநிலக்கிழவரும் தன்மான இயக்கத்தினரும் ஆகிய ரா. குப்புசாமி அவர்களின் பாட்டினார், குப்பாயம்மாள் திடீரென்று தமது 69வது வயதில் தனது இல்லத்தில் 2-6-45ந் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார். 3-6-45ந் தேதி அவரது பிரேதம் தன்மான இயக்கத் தோழர்கள் உள்ளூர், வெளியூர் பிரமுகர்கள் சுமார் மூவாயிரம் பேர்கள் சூழ்ந்துவர புஷ்பத்தேரில் மிகவும் அலங்காரத்துடன் ஊர்வலம் செய்யப்பட்டு அவருக்கென அவர் ஏற்கனவே அமைத்து வைத்திருந்த சமாதியில் அடக்கம் செய்யப்பட்டது. பிரேதம் அடக்கம் செய்தவுடன் ஏழை எளியவர்களுக்கு வஸ்திரங்களும், அரிசியும் ஏராளமாக வழங்கப்பட்டது. 'திராவிடநாடு' வளர்ச்சிக்காக ரூ 5-ம், 'குடி அரசு' வளர்ச்சிக்காக ரூ. 5-ம் நன்கொடையளிக்கப்பட்டது. அவரது மறைவு அனைவருக்கும் ஆழ்ந்த வருத்தத்தைத் தருகிறது. அவரது இறுதிநாட் கடன் அவரது இல்லத்தில் 12-6-45-ந் தேதி புதன் கிழமை ஆரிய பார்ப்பன சடங்கின்றி நடைபெறும்.

திருமணங்கள்

காரைக்கால் தோழர் சா. ஆறுமுக நாடார் அவர்கள் மகள் தோழர் முத்துலட்சுமிக்கும் காரைக்குடி தோழர் சு. அண்ணாமலை நாடார் சகோதரன் தோழர் பெருமாள் பாண்டியனுக்கும் காரைக்கால் மாதாகோவில் தெரு வடக்குக் கடைசி காளியம்மன் கோவில் தெரு மணமகள் இல்லத்தில் 13-6-45-ந் தேதி காலை 11 மணிக்கு மேல் குடந்தை தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் முன்னிலையில் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரனால் வாழ்க்கை ஒப்பந்தம் நடத்திவைக்கப்படும். தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

* *

கல்லிடைக்குறிச்சி தோழர் சுப்பையாத்தேவர் புதல்வி தோழர் சிவனம்மாளுக்கும் தோழர் சி. கணபதி அவர்களுக்கும் 13-6-45-ந் தேதி காலை 10-மணிக்கு மேல் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

புரட்சிக் கவிஞரின் பிறந்தநாள் விழா

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாள் விழா புதுச்சேரி சின்னக்கடை பஜனை மடத்தில் 20-5-45 தேதி கொண்டாடப்பட்டது. தோழர் முத்து அருணாசலம் அவர்கள் தலைமை தாங்கினார்.

தலைவர் தனது முன்னுரையில் பாரதிதாசன் ஓர் தலைசிறந்த கவிஞர் என்றும், அவரைப்போற்றுவது தமிழர் கடன் என்றும் கூறி, அவருடைய வாழ்க்கையை ஒருவாறு எடுத்தியம்பினார்.

பிறகு தோழர்கள் சோமசுந்தர ஐயர், சாந்திதாஸ் ஆகியோர் பேசியபின், தோழர் பி. காஞ்சி கலியாணசுந்தரம் பாரதிதாசனுடைய மேன்மையையும், அவருக்கு நிதி அளிக்கவேண்டியதின் அவசியத்தைப் பற்றியும் விரிவாகப் பேசினார்.

தோழர் அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்கள், கவிஞர் அவர்களின் தமிழிலக்கியச் சேவையையும், தமிழ்நாட்டில் அதனாலுண்டான புரட்சியையும், அவரின் தமிழ்ப்பற்றையும், அவருக்குள்ள புலமையும், விளக்கிப்பேசினார்.

தலைவரின் முடிவுரைக்குப்பின், புதுவையிலுள்ள சகுந்தலா சாயத்தொழிற்சாலையின் உரிமையாளர் தோழர் பி. ராமலிங்கம் அவர்களால், "பாரதிதாசன் நிதிக்காக" ரூ. 101 (நூற்றி ஒன்று) நன்கொடையளிக்கப்பட்டது. தோழர் பெரியசாமி அவர்கள் நன்றிகூற, கூட்டம் இனிது முடிந்தது.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேல் ஆகியவற்றிற்கும், வெடிகுண்டு விஷப்புகைக்கும், தபால் செய்திக்கும் வானொலிக்கும், உள்ள வித்தியாசங்களுக்குக் காரணம் மனிதனுடைய அறிவுப் பெருக்கமே அல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும். மனிதனுடைய அறிவல்ல, சர்வ வல்லமையுள்ள கடவுள் தன்மை இவற்றிற்குக் காரணம் என்று சொல்லப்படுமானால் கடவுள் புதியவரல்ல. அன்றியும் அக்கால கடவுள் வேறு, இக்காலக் கடவுள் வேறு என்று சொல்லக்கூடியவருமல்ல. அல்லது கடவுளுக்கு நாளுக்குநாள் அறிவு பெருக்கமும் அனுபோக தேர்ச்சியும் ஏற்பட்டது என்று சொல்லவும் முடியாது. ஆதலால் மனிதனுடைய அறிவுப்பெருக்கமும் அனுபவ முயற்சியும் இந்த அதிசயங்களுக்குக் காரணம் என்றும் அதனாலேயே அக்கால மனிதர்களைவிட இக்கால மனிதர்கள் அறிவு அனுபவம் பெற்றவர்கள் என்றும் சொல்லவேண்டி இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் உள்ள இந்தக் காலத்தில் இருக்கின்ற நாம் மற்ற காரியங்களில் ஏற்பட்ட அறிவு திறனையும் அதிசய சக்தியையும் அனுபவித்துக் கொண்டு இந்தக் கேடுகெட்ட மானங்கெட்ட இழி நிலைக்குக் காரணமாக அர்த்தமற்ற சூழ்ச்சிகரமான, காட்டுமிராண்டி காலத்தில் ஏற்பட்ட மதம், கடவுள்கள், சாஸ்திரம் சடங்கு, ஜாதிமுறை, ஜாதி மதக்குறி, உயர்வு தாழ்வு பேதம், அறிவுக்குப் பொருந்தாத அர்த்தமற்ற கொள்கை ஆகியவற்றை பிடித்துக் கொண்டு கஷ்டவாழ்வு வாழ்வது எப்படி அறிவுடைய ஒப்புக்கொள்ளக் கூடிய காரியமாகும். இதை எடுத்துச் சொல்ல விளக்கிக்காட்ட மனிதனுக்கு அசாதாரணமான சக்தி வேண்டியிருக்கிறது. இது என்ன நியாயம்? சூழ்ச்சிக்காரர்களின் சூழ்ச்சிகளையும், பாமர மக்களின் மடமையையும், சுயநலக்காரரின் மானமற்ற தன்மையும் இந்த அறிவுவளர்ச்சியான காலத்தில்- ஒளிபெற்ற காலத்தில் விளக்குவதற்கு இவ்வளவு கஷ்டப்படவேண்டி இருக்கிறது.

அறிவுதான் கடவுள் என்பான் பண்டிதன். ஆனால் அவன் கற்பிக்கிற வணங்குகிற கடவுள் உலகில் உள்ள எல்லா அயோக்கியத்தனங்களுக்கும் கொண்டாடாக இருக்கும்.

அழகுதான் கடவுள் என்பான், ஆனால் ஆபாச அலங்கோலத் தோற்றங்களெல்லாம் அவன் கற்பித்துள்ள கடவுள்களின் பிரதி பலிக்கும்.

உயர்ந்த ஒழுக்கமும் மக்கட்கு வழி காட்டும் நல்ல நடத்தைகளும்தான் புராணங்கள், சாத்திரங்கள் என்று கூறுவான். ஆனால் அவைகளில் கூடாவொழுக்கங்களும் இழிதன்மைகளும் ஏராளமாக வழிந்து ஓடும். இவைகளுக்குக் காரணம் அவைகள் ஏற்பட்ட காலத்தைச் சிந்திக்காமல், ஏற்படுத்தினவர்களின் தன்மையை அறியாமல், தங்களின் பெருமைகளைக் காட்டிக்கொள்ளவும், தங்கள் பிழைப்புக்கு வழிதேடவும் இவைகளைப் பயன்படுத்த வேண்டியதாகிவிட்டதால் அவர்களின் நிலைமை பரிதபிக்கத்தக்கதாக ஆகிவிட்டது. அதை சிந்தித்துப் பார்ப்பார்களேயானால் நம்மை யாரும் குறைகூற மாட்டார்கள் என்பதோடு சிறப்பவர்கள் ஒவ்வொருவரும் நம் நிலைக்கே வருவார்கள் என்று நான் கருதுகிறேன்.

தோழர்களே! நீங்கள் ஒவ்வொருவர்களும் உங்களது வாழ்நாளில் ஏதாவது ஒரு திருத்தத்தைச் செய்து ஒரு சிறு திருத்தத்திற்காவது காரணஸ்தர்களாக ஆகி உங்கள் பிறவிக்கு ஒரு பயனை உண்டாக்குங்கள். அதுதான் நீங்கள் செய்யவேண்டிய வேலையே தவிர பழமையில் வீரர்களாக மடிவதில் உங்களுக்கும் பயனில்லை, பின் சந்ததிக்கும் பயனில்லை. உலகில் உள்ள கேடுகளோ இழிவுகளோ நீங்குவதற்கும் பயனில்லை. ஆகையால் அருள் கூர்ந்து பொறுமையோடு நம் நிலைமையில் இருந்து நான் சொன்ன விஷயங்களை சிந்தித்து ஒரு பயன் கண்டு பணியாற்ற உதவி புரியுமாறு வேண்டிக்கொள்கிறேன்."

சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்கம்

நிர்வாகத் தேர்தல் கூட்டம்

12-6-45 செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு சேலம் சுயமரியாதை சங்கக் கட்டடத்தில் சுயமரியாதைச் சங்க நிர்வாகத் தேர்தல் கூட்டம் போட்டிருப்பதால் மேற்படி சங்க அங்கத்தினர் அனைவரும் இதையே அழைப்பாகக் கருதி வரவேணுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எம். ஆர். சித்தையன்
தலைவர்,
சுயமரியாதைச் சங்கத்தார்.

கவிஞர் பாரதிதாசன்

வாணியம்பாடி திராவிடர் கழகத்தின் சார்பில் 24-5-45-ந் தேதியில் வாணியம்பாடி ஆம்பூர்பேட்டையிலுள்ள இந்து மத்தியதர பாடசாலை கட்டிடத்தில் முனிசிபல் கவுன்சிலர் தோழர் சி. கோவிந்தராஜன் தலைமையில் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழரும் தமிழ் நாடும் என்னும் பொருள் பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

திட்டக்குடி திராவிட இளைஞர் கழகம்

31-5-45 வியாழன் மாலை 5 மணிக்கு திட்டக்குடி தோழர் சக்கரபாணி அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர் இரா. பிச்சகுட்டி அவர்கள் இல்லத்தில் கூடலூர் தோழர் திராவிட மணி பி. ஏ., அவர்கள் திராவிட இளைஞர் கழகத்தைத் திறந்து வைத்தார்கள்.

அன்று மாலை 6-30 மணிக்கு தோழர் பெரியசாமி அவர்கள் தலைமையில் சிவன் கோயிலுக்கெதிரில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ஆ. திராவிடமணி பி. ஏ., பண்ருட்டி கரீம் ஆகியோர் "தற்கால அரசியல் நிலைமை" என்பது பற்றி அரிய சொற்பொழிவாற்றினார்கள்.

நீத்தார் கடன்

கூடலூர் பகுத்தறிவு கழக உறுப்பினர் கிருட்டிணமூர்த்தியின் தாயார் சானகி அவர்கள் 27-5-45-ல் உயிர் நீத்ததை முன்னிட்டு 6-6-45-ல் தோழர் காஞ்சி கலியாணசுந்தரம் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் இரா. இளம்வழுதி, சி. இளவழகன் "நீத்தார் கடன்" என்பது குறித்துப் பேசினார்கள். தோழர் ஆ. திராவிடமணி நன்றி கூறினார். யாவருக்கும் சந்தனம், தாம்பூலம் வழங்கினார்கள்.

ஜமீன்தார் அல்லது மருத-வாணி

கோபி திராவிட நடிகர் கழகத்தாரால் மேற்படி நாடகம் ஜூன் மாதக் கடைசியில் கோபி, திருமுருகன் டாக்கீஸில் பாரதிதாசன் நிதிக்காக நடைபெறும்.

திராவிட கழகத் திறப்பு விழா

மாயவரம் தாலுகா நடராஜ பிள்ளை சாவடியில் வி. எஸ். இராஜன் இல்லத்தில் 10-6-45-ந் தேதி மேற்படி திறப்பு விழா மாயவரம் வழக்கறிஞர் தோழர் இலட்சுமி காந்தம் சகோதரர் தோழர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறும். காஞ்சி கல்யாண சுந்தரம் கொடியேற்றுவார். மாணவர் இளம்வழுதி திராவிட நாட்டுப் படத்தைத் திறந்துவைப்பார்.

மறுமலர்ச்சி எழுத்தாளர் மாநாடு

தமிழ்நாடு முஸ்லிம் மறுமலர்ச்சி எழுத்தாளர் முதலாவது மாநாடு 29-4-45ல் ஈரோடு சரஸ்வதி ஹாலில் பண்டிட் ஜெயலானி சாஹிப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தாராபுரம் பேகம் ஜீனத்துனிஸா அவர்கள் கொடியேற்றுவிழா செய்து அழகியதோர் சொற்பொழிவாற்றினார். ஈரோடு தோழர் எஸ். யூசுப் மரைக்காயர் மாநாட்டைத் திறந்துவைத்தார். தோழர் எஸ். ஸெய்யத் அப்பஜான் தமது வரவேற்புரையை நிகழ்த்தினார். பின் தலைவர் தமது முகவுரையில், முஸ்லிம்கள் தான் தனித் தமிழ் பேசுகிறவர்கள் என்றும், காரணம் திராவிடர்கள் ஆதியில் ஆரியத்தின் கொடுமை தாங்கமாட்டாமல் முஸ்லிம்களானார்கள் என்றும், முஸ்லிம்களான திராவிடர்கள் தங்கள் கலையை பிறர் கலையால் கலக்க இடம் கொடுக்கவில்லையென்றும், இன்று திராவிடர்களும் தங்கள் கலையைத் தனியாக இஸ்லாமியக் கலைபோல் ஆக்க முயன்று வருகிறார்கள் என்றும் கூறிவிட்டு முஸ்லிம்களிடையே தனித் தமிழ்ச் சொற்கள் இருந்து வருகிறது என்பதை உதாரணத்துடன் விளக்கினார். உண்மையான முஸ்லிம் பத்திரிகைகள் செய்யவேண்டிய சேவையையும் விளக்கினார். முஸ்லிம்களுக்கு எழுச்சியூட்டிய பெரியார் போன்றவர்களைத் தாக்குவது பத்திரிகைத் தொழில் என்றோ கடமை என்றோ இருத்தல் கூடாது என்பதை எடுத்துக்காட்டினார். இஸ்லாமிய எழுத்தாளர்கள் சமூகத்தின் பேரால் நடைபெறும் அனாச்சாரங்களைக் கண்டிக்கவேண்டியதின் அவசியத்தையும் எடுத்துக்காட்டினார். முஸ்லிம்கள் தங்கள் இன முன்னேற்றத்திற்கு ஆக்க வேலைகள் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். உருது கற்பிப்பவர்கள் போதனாமுறை பயிற்சி பெற வேண்டியதின் அவசியத்தையும் விளக்கினார். பிற்பகல் மாநாட்டில் தோழர்கள் டி. எஸ். ஏ. ரசூல், காரைக்கால் 'பால்யன்' உதவி ஆசிரியர் அபூஹனீப், கோவை கே. எம். ஹனீப் சாஹிப், ஏ. ஷம்சுதீன் பாட்சா சாஹிப், ஈ. வெ. கி. சம்பத், அன்னபூரணி அம்மையார், முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் தமிழ்நாட்டின் எழுத்தாளர்கள் விரைவில் ஒரு சங்கம் நிறுவ வேண்டுமென்றும், முஸ்லிம் எழுத்தாளர்கள் ஒன்றுபட்டுழைக்குமாறு கேட்டுக்கொண்டும், முஸ்லிம்களுக்குத் தமிழில் தனி இலக்கியம் எழுதுமாறு புலமைமிக்காரைக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புலிவலம் திராவிடர் கழகம்

21-5-45-ந் தேதி புலிவலம் தோழர் என். வேதையன் அவர்கள் இல்லத்தில் ஷையார் தலைமையில் புலிவலம் (திருவாரூர்) திராவிடர் கழக அமைப்பு ஆரம்பக் கூட்டம் கூடியது. அதுசமயம் தோழர்கள் எஸ். இராசு தலைவராகவும், என். மருதமுத்து உபதலைவராகவும், எம். இராமு பொருளாளராகவும், ஆர். தியாகராசன் செயலாளராகவும், இ. மாசிலாமணி, என். வேதையன், எஸ். எஸ். பக்கிரிசாமி ஆகியவர்கள் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் தோழர் எஸ். இராசு தலைமையில்கூடி சேலத்தில்நடந்த மகாநாட்டின்தீர்மானங்களை ஆதரித்தும், 7, 8-ந் தேதிகளில் சென்னையில் நடந்த போலி ஜஸ்டிஸ் மாநாட்டைக் கண்டிப்பதுடன் சென்னை சர்க்கார் இப்போலி மாநாட்டை ஆதரிக்கக்கூடாதென்று கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

பூந்தோட்டம்

சிதம்பரம் தாலுகாவிற்கு மேற்கே 6 மைல் தூரத்திலுள்ள பூந்தோட்டம் கிராமத்தில் ஷையூர் திராவிட கழக ஆதரவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் ஜூன் மாதம் நடைபெறும். திராவிடத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா., தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., வழக்கறிஞர் டி. பி. வேதாசலம், புரட்சிக்கவியரசர், மற்றும் பல இயக்கத் தலைவர்களும் கலந்து கொள்வார்கள். கூட்டம் நடக்கும் சரியான தேதி விரைவில் வெளிவரும்.

அம்பேத்கார் மாணவ இல்லம்

திருச்சி அம்பேத்கார் மாணவர் இல்லத்தின் நன்கொடை வரவு மொத்தம் ரூ. 470-8-0 என்றும், மார்ச்சு மாதத்திற்கும், ஏப்ரல் 10-ந் தேதி வரையிலும் மாணவர்கட்கு மொத்தச் செலவு ரூ. 294-9-11 என்றும், மீதி கையிருப்பு ரூ. 175-14-1 என்றும் ஷை இல்லத்தின் கௌரவ மானேஜர் தெரிவிக்கிறார். புதிய வருடத்திற்கும் தாராளமாக உதவும் பொருட்டு வேண்டுகிறார்.

அன்று இரவு 10-மணிக்கு தோழர் ஈ. வி. கே. சம்பத் தலைமையில் கும்பகோணம் சங்கீதவித்வான் தோழர் A. D. சுல்தான் அவர்களும் காரைக்கால் எ. எம். தாவூத் மரைக்காயரும் இனிய தமிழிசை விருந்தளித்தனர். பாடகர்களுக்கு வெள்ளிக்கோப்பையும், மெடல்களும் பரிசளிக்கப்பட்டன.

ஈரோடு சித்தீக் தொண்டர் படை

அறிவிப்பு

தென்னாட்டில் முஸ்லிம்லீக் சம்பந்தப்பட்ட எல்லா மாநாடுகளுக்கும், திருநபி ஜனனவிழா போன்ற வைபவங்களுக்கும், திராவிடஸ்தானத்திற்கு போராடும் திராவிட இயக்கத்தில் சம்மந்தப்பட்ட மாநாடுபோன்ற எல்லா காரியங்களுக்கும் எங்கள் சித்தீக் தொண்டர் படை இலவச சேவை செய்யத் தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால் 15நாட்களுக்கு முன்பு தெரியப்படுத்தவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

அ. சேக்தாவூது சாயபு,
சித்தீக் தொண்டர்படைத் தலைவர்,
குயின் வீதி, ஈரோடு

பொன்மலை திராவிடர் இளைஞர் கழகம்

ஷை கழகத்தின் நிர்வாகக் கூட்டம் 29-5-45-ந் தேதி தோழர் எஸ். நடராஜன் தலைமையில் கூடியது. அதுசமயம், மேற்படி கழகத்தின் ஆண்டுவிழாவை ஜூன் மாதக் கடைசி வாரத்தில் பெரியார், தளபதி, நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத் முதலியவர்களைக்கொண்டு சிறப்பாக நடத்துவதென்றும், இக் கழகத்திற்கு ஓட்டுரிமை செய்யவோ, நிர்வாகஸ்தர்களாக நிற்கவோ முழு சந்தா செலுத்தியவர்களுக்குத்தான் உரிமையுண்டென்றும், ஷை கழக உதவி காரியதரிசி யு. சுப்பையன் அவர்கள் தந்தை இறந்தது கண்டு வருந்துவதாகவும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அண்ணாமலை நகர் திராவிடர் கழகம்

13-5-45 மாலை 7-30க்கு தோழர் நாராயணசாமி அவர்கள் இல்லத்தில் கூடிய திராவிடப் பெருங்குடி மக்களின் கோருதல்படி மணவழகனார் தலைமையில் நாட்டுநிலைமை—திராவிடர் உரிமை உணர்ச்சிகள்பற்றி தோழர் தமிழொளி, திருமாறன், தென்னன் முதலானவர்கள் பேசியபின் தோழர்கள் க. தி. பழமலை தலைவராகவும், த. நாராயணசாமி துணைத் தலைவராகவும், என். பிச்சமுத்து, என். சிவலிங்கம் செயலாளராகவும் பிற எண்மர் செயற் குழுவினராகவும் திராவிட கழகம் திறக்கப்பட்டது. அதன் தலைவர் பழமலை நன்றிகூற இரவு 10-மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

சூலூரில் பெரியார்

27-5-45 மாலை 6 மணிக்கு சூலூர் பஞ்சாயத்துப் போர்டு ஆபீசுக்குப் பின்புறத்தில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் தோழர் கவியரசு பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் வித்வான் குழந்தை, சம்பத்து, நெடுஞ்செழியன் முதலியோர்கள் பேசிய பின் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சுமார் 2 மணி நேரம் வரை நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

தோழர் பாரதிதாசன் அவர்களால் 'பகுத்தறிவு' படிப்பகம் திறந்து வைக்கப்பட்டது.

பின் மணமகன் கந்தசாமி அவர்களால் வணக்கம் கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

திருமணம்

27-5-45-ஆம் தேதி காலை 9-மணிக்கு சூலூரில் தோழர்கள் கந்தசாமி நாகம்மைக்கு பெரியார் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. சீர்திருத்தத் திருமணத்தின் அவசியத்தைப் பற்றி பெரியார் அவர்களாலும் மற்றும் பல நண்பர்களாலும் விளக்கமாக சொற்பொழிவாற்றப்பட்டது.

புரட்சிக்கவி பாரதிதாசன் நிதி

ஷை நிதிக்கு நாமக்கல் வட்டத்தில் ரூ. 1000 வசூல் ஆகியிருக்கிறது என்றும் ஷை நிதிக்கு பணம் வசூல்செய்ய ரசீது புத்தகங்கள் வேண்டுவோர் தோழர் என். கிருஷ்ணராஜு ரெட்டியார், நாமக்கல் என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

'குடி அரசு' பைண்டு வால்யூம்

"குடி அரசு" பைண்டு வால்யூம்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. 4-வது வருட முதல் 13-வது வருடம் வரை (6-வது வருடம் நீங்கலாக) கிடைக்கும். ஒரு வருட வால்யூமின் விலை ரூ. 5—0—0. தபால் செலவு பிரத்யேகம். வால்யூமின் எடை அதிகமாக இருப்பதால், ரயில் பார்சல் மூலம் வரவழைத்துக் கொள்ள சௌகரியமுள்ளவர்கள் ஆர்டர் கொடுப்பது நலம்.

"குடி அரசு" பதிப்பகம்,
ஈரோடு.

லால்குடியில் பார்ப்பனரல்லாதார் பொதுக் கூட்டம்

லால்குடி பஞ்சாயத்துப் போர்டார் சென்ற 9-5-45-ல் கிராமப் பொதுவானதும் புறம்போக்கைச் சேர்ந்ததுமான பாப்பான்குளம் என்று வழங்கப்படும் குளத்தைப் பார்ப்பன ஆதிக்கத்திலிருந்து மீட்டு பார்ப்பனரல்லாத மக்கள் உட்பட எல்லாப் பொது மக்களின் உபயோகத்திற்காகவும் திறந்துவிட்டிருக்கிறார்கள். இது குறித்து பார்ப்பனரல்லாத பொது மக்களின் மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்வதற்காகத் தோழர் ம. கி. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில் பார்ப்பனரல்லாத பொது மக்களின் பொதுக் கூட்டம் 11-5-45-ந் தேதி கூடியது. அதுபோது பார்ப்பனர்களின் கொடுமைகளையும் அவர்கள் இந்நாட்டுப் பெருங்குடி மக்களுக்குச் செய்துவரும் கேட்டையும் விளக்கிக் கூறி இவ்வூரில் ஒரு பொதுக் குளத்தைப் பார்ப்பனர்கள் சென்ற 5, 6 ஆண்டுகளாக அத்து மீறி ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததோடு அதன் காரணமாக மீண்டும் அதன்பேரில் தனிப் பாத்தியதையும் பாதுகாப்பும் தேடுவதற்கு முயற்சித்து அதற்காக வழக்குத் தொடரவும் வாதாடவும் காப்பிக்கடைப் பார்ப்பனன் முதல் ரிட்டையர்டு ஜில்லா ஜட்ஜு பார்ப்பனன் வரையில் எல்லாப் பார்ப்பனரும் முயற்சித்து வருவதும் டி. எஸ். எஸ். ராஜன் போன்ற பிரபல தேசியப் பார்ப்பனர்களும் இதற்குப் பக்கத்துணையாக நிற்பதும் இத்தகைய அத்து மீறிய, சட்டத்திற்குப் புறம்பான காரியங்களுக்கு அரசாங்கத்தில் பென்ஷன் பெற்றுவரும் ரிட்டையர்டு இன்ஜினியர்கள், முன்சீப்கள், ஜில்லா ஜட்ஜு முதலியவர்கள் (1942-ம் வருஷத்திலேயே மேற்படி குளம் எல்லோருக்கும் பொது என்று ஜில்லா கலெக்டர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருப்பதை அறிந்திருந்தும்) வரிந்து கட்டிக்கொண்டு முன்வந்து வாதாடுவதும் அவர்களுக்குத் தங்கள் சமூகத்தின் மீது இருந்துவரும் பற்றின் மிகுதியையே காட்டுகிறதென்றும் இது போல் நம்மவர்களிடையேயும் இனப் பற்றுமிருத்தல் வேண்டுமென்றும் கூறி தோழர்கள் டி. பி. வேதாசலம், தனமணி ராசன், எம். நாராயணசாமி, புலவர் குழந்தையன், சுந்தரமூர்த்தி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் எல். எஸ். ஆறுமுகம் அவர்களால் தமிழ்ப் பெரும் புலவர் கா. சுப்பிரமணியப் பிள்ளை எம். ஏ., எம். எல்., அவர்கள் காலம் சென்றமைக்கு இரங்கல் உரையும், ஐரோப்பிய போரில் நேச வெற்றியைப் பாராட்டியும், லால்குடி பஞ்சாயத்துப் போர்டார் புறம்போக்குக் குளத்தை அனைவருக்கும் திறந்துவிட்டதற்காக அவர்களைப் பாராட்டியும் ஓக்கூர் குளத்தை ஒரு பகுதி ஆர்த்து அதில் பார்க்கும், ரேடியோவும் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டும், கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் எல். ஆர். நம்மாழ்வார் அவர்களால் நன்றி கூறப்பட்டு இரவு 10½ மணிக்கு கூட்டம் கலைவுற்றது.

விழுப்புரத்தில் சாந்தா அல்லது பழனியப்பன்!

நாகை திராவிட நடிகர் கழகத்தாரால் விழுப்புரம் கமலா எலக்ட்ரிக் தியேட்டரில் 16-5-45 இரவு 10-30க்கு சுகாதார சித் தலைவர் தோழர் என். கோவிந்தராசலு நாயுடு அவர்கள் தலைமையில் "சாந்தா அல்லது பழனியப்பன்" என்னும் நாடகம் துவக்கப்பட்டது. தோழர் சையது இஸ்மாயில் முனிசிபல் கவுன்சிலர் அவர்கள் திறந்துவைத்தார். 'தொழிலாளர் மித்திரன்' ஆசிரியர்கள், கல்யாணசுந்தரம் நாடகத்தின் சிறப்பியல்களையும், நடிகர்களின் திறமையையும் பாராட்டிப் பேசினார். நாடகம் வெற்றிகரமாக தினசரி நடைபெற்று வருகிறது. நடிகர் கழகத்தலைவர் ஆர். வி. கோபால் அவர்களையும் இந்நாடகம் விமரிசையாகத் துவங்க உதவிகள் புரிந்த உள்ளூர் தோழர் டாக்டர் தியாகராசன் அவர்களையும் ஏனையோரையும் பாராட்டி நன்றி செலுத்தப்பட்டது.

பிறப்பு

திருச்சி தோழர் கூ. க. கூடலிங்க நாடார் அவர்கள் துணைவியார் 25-5-45-ந் தேதி ஒரு ஆண் மகவைப் பெற்றார். தாயும் சேயும் சுகமாகவிருக்கின்றனர். குழந்தைக்கு "பன்னீர் செல்வம்" என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாகக் 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

தேவை

"குடி அரசு" வாரப் பத்திரிகை விற்பனை செய்ய டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

1. திருப்பூர்
2. உடுமலைப்பேட்டை
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. கிருஷ்ணகிரி
6. வ. ஆ. வேலூர்

மானேஜர்.

Edited, Printed, and Published by [illegible] of the [illegible] Press 42 Cutchery street, Erode.